Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 கதிர் : 79 | சனிக்கிழமை | தை 31 ஆம் நாள் 13 பெப்ரவரி 2021 | வள்ளுவர் ஆண்டு 2051

பக்கங்கள்: 20 விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

# சந்தை வியாபாரிகளுக்கு கொரோனா

# அச்சுவேலியில் அடுத்த கொத்தணி?

## குடாநாட்டில் மீண்டும் அச்சம்

யாழ்ப்பாணம், பெப்ரவரி 13

அச்சுவேலிச் சந்தையில் எழுமாறாக நடத்தப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் சந்தை வியாபாரிகள் நால்வருக்குக் கொ ரானா வைரஸ் தொற்றுள்ளமை உறுதிசெய்யப்பட்டுள்ளது. சந்தை வியாபாரிகள் தொற்றுக்குள்ளாகியுள்ள நிலையில், வடக்கில் புதிய கொரோனாக் கொத்தணி ஒன்று உருவாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

19

## 10 பேருக்கு நேற்று வடக்கில் தொற்று

யாழ்ப்பாணம், பெப்.13

வடக்கில் நேற்று 10 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் ஆறு பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இருவர் அரியாலைப் பகுதியைச் சேர்ந்தவர்கள். நால்வர் அச்சுவேலியைச் சேர்ந்தவர்களாவர்.

19



## யாழ். பஸ் நடத்துநரின் குடும்பத்திலும் தொற்று

யாழ்ப்பாணம், பெப்.13

யாழ்ப்பாணத்தில் பயணிகள் பஸ் சேவையில் ஈடுபடும் பஸ் நடத்துநர் ஒருவருக்கு நேற்றுமுன்தினம் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்த நிலையில், நேற்று அவரது மனைவிக்கும், மகனுக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. உடல் சுகவீனம் காரணமாக யாழ்ப்பாணம் போதனா

19



## பம்பைமடுவில் உள்ளோருக்கு புதிய வகை வைரஸ் தொற்று!

யாழ்ப்பாணம், பெப்.13

பிரிட்டனில் பரவும் புதிய வகை கொரோனா வைரஸ் வவுனியாவில் இனங்காணப்பட்டுள்ளது என்று வெளியாகும் தகவல்களால் மக்கள் அச்சமடையத் தேவையில்லை. சைப்பிரஸ் நாட்டில் இருந்து

19

## திறமையான அதிகாரிகளுக்கு அரசியல் தரப்பின் அழுத்தம்!

யாழ்ப்பாணம், பெப்.13

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள திறமையான அதிகாரிகளை இடமாற்றுவதற்கு ஆளும் கட்சியைச் சேர்ந்த அரசியல் தரப்பு ஒன்று பகீரதப் பிரயத்தனம் மேற்கொண்டு வருகின்றது எனக் கூறப்படுகின்றது. உயர் அதிகாரிகள் ஊடாக சம்பந்தப்பட்ட அலுவலர்கள் அதிகாரிகளை சுயமாக இடமாற்றம் பெற்றுச் செல்வதற்குரிய அழுத்தங்களை மேற்படி அரசி

18

## மைத்திரி விரைவில் கைது?

கொழும்பு, பெப்.13

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுடன் தொடர்புடைய ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையின் பிரதியை வழங்க வேண்டும் என்று சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா, ஜனாதிபதியின் செயலாளரிடம் அவசர கோரிக்கை விடுத்துள்ளார். இதனால் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால கைது செய்யப்பட

19

## கோத்தா ஆணைக்குழுவுக்கு யோகேஸ்வரி ஆணையாளர்!

கொழும்பு, பெப்.13

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் ஆணையாளராக யாழ்ப்பாணம் மாநகர சபை முன்னாள் மேயரும், யாழ்ப்பாணம் மாநகர சபையின் தற்போதைய உறுப்பினருமான ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியைச்

19

## கோத்தாவின் ஆட்சியே பேரணிக்குக் காரணம்

*சஜித் விசனம்*

கொழும்பு, பெப்.13

இலங்கையில் தற்போது ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் இராணுவ ஆட்சியே நடைபெறுகின்றது. இந்த ஆட்சியால் சீற்றமடைந்தே வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் இன்று ஐ.நாவிடம் நீதி வேண்டி ஜனநாயகவழியில் போராட்டங்களையும், பேரணிகளையும் முன்னெடுக்கின்றனர்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

19

## கொச்சிக்கடை அந்தோனியாருக்கு அநாமதேயக் கடித மிரட்டல்!

கொழும்பு, பெப்.13

2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத்தன்று மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் போன்று இலங்கையில் மீண்டும் தாக்குதல் இடம்பெறலாம் என்ற அநாமதேயக் கடிதம் காரணமாக புலனாய்வுப்

18

## விவசாயிகள் முயற்சியில் உழவர் சந்தை ஆரம்பம்!

வவுனியாவில் புதுமுயற்சி

வவுனியா, பெப். 13

விவசாயிகளின் நன்மைகருதி வவுனியாவில் ஓர் உழவர் சந்தை உருவாக்கப்பட்டுள்ளது என்று மாவட்ட கமக்காரர் அமைப்புகளின்

18

இலங்கை நிலைமை மோசமடைகின்றது

# ஈழத்தவரின் புகலிட நடைமுறைகளை சுவிஸ் மறுபரிசீலனை செய்யவேண்டும்

அகதிகள் உதவி அமைப்பு கோரிக்கை

**கொழும்பு, பெப். 13**

**சுவிஸ் அரசு ஈழத் தமிழ் அகதிகளுக்கு தஞ்சம் வழங்குவது தொடர்பான தனது நடைமுறைகளை மீள் பரிசீலனை செய்யவேண்டும் என்று அந்த நாட்டின் அகதிகள் உதவி அமைப்பு கோரியுள்ளது.**

குடியேற்றவாசிகள் தொடர்பாக முன்னர் நல்லிணக்க அரசுடன் செய்து கொண்ட, அகதிகளைத் திருப்பி அனுப்பும் உடன்படிக்கையை சுவிஸ் இடை நிறுத்த வேண்டும் என்றும் அந்த அமைப்பு கோரியுள்ளது.

இலங்கையில் சிவில் நிலைமைகள் மோசமடைந்து வருகின்றமை குறித்து தனது பிந்திய அறிக்கை ஒன்றில் கவலை வெளியிட்டிருக்கின்ற சுவிஸ் அகதிகள் உதவி அமைப்பு, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரது அண்மைய பரிந்துரைகளுக்கு ஏற்ப இலங்கை அகதிகளுக்குத் தஞ்சம் வழங்குதல், அவர்களை நாட்டுக்குத் திருப்பி அனுப்புதல் தொடர்பான நடைமுறைகளை சுவிஸ் சமஷ்டி அரசின் குடியேற்றத்துக்கான செயலகம் மீள்பரிசீலிக்க வேண்டும் என்று கோரியுள்ளது.

இலங்கையில் உள்நாட்டுப் போர் முடிவடைந்து நல்லிணக்க நிலைமை தோன்றியதையடுத்து 2016, 2018 ஆம் ஆண்டுகளில் அன்றைய சிறிசேனா அரசுடன் சுவிஸ் அரசு பரஸ்பர புரிந்துணர்வு உடன்படிக்கைகளைக் கைச்சாத்திட்டிருந்தது.

தொழில் நிமித்தம் குடியேறுவோர், அகதிகள், தஞ்சம் மறுக்கப்பட்ட அகதிகளைத் திருப்பி அனுப்புதல், குடியேறிகள் பரிமாற்றம் ஆகியன வற்றை உள்ளடக்கிய அந்த உடன்படிக்கைக்கு அது கொழும்பில் கைச்சாத்திடப்பட்ட சமயத்தில் சுவிஸ் அகதிகள் உதவி அமைப்பும், சர்வதேச மன்னிப்புச் சபையும் கண்டனம் வெளியிட்டிருந்தன.

அண்மையில் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் வெளியிட்ட இலங்கை நிலவர அறிக்கை இலங்கையர்களுக்குத் தஞ்சம் வழங்குகின்ற உறுப்பு நாடுகள் தங்கள் புகலிடக் கொள்கைகளை மீளப் பரிசீலிக்க வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தி உள்ளது என்று அகதிகள் நலன் பேணும் அமைப்புகள் குறிப்பிட்டுள்ளன.

தஞ்சம் மறுக்கப்பட்ட இலங்கையர்கள் நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்பட்டால் அங்கு கைது, சித்திரவதை போன்ற மீறல்களுக்கு மீண்டும் ஆளாக நேரிடலாம் என்று அந்த அமைப்புகள் அச்சம் வெளியிட்டுள்ளன.

சுவிஸ் நீதி அமைச்சின் தகவலின்படி அந்நாடு சுமார் 51 ஆயிரம் இலங்கை அகதிகளுக்குப் புகலிடம் வழங்கி உள்ளது. அவர்களில் அரைவாசிப் பங்கினர் சுவிஸ் குடியுரிமையைப் பெற்றுள்ளனர். மொத்த இலங்கை அகதிகளில் 95 வீதமானவர்கள் ஈழத் தமிழர்களே. - என்று தெரிவிக்கப்பட்டது. (த-இ)

## வடக்கு மாகாணத்திலுள்ள அம்புலன்ஸ் சாரதிகளை இடமாற்ற தற்காலிக தடை

மேன்முறையீட்டு நீதிமன்று கட்டளை

யாழ்ப்பாணம், பெப். 13

வடக்கு மாகாண அம்புலன்ஸ் சாரதிகளின் இடமாற்றத்தை எதிர்வரும் 25ஆம் திகதிவரை இடைநிறுத்தி வைக்குமாறு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்று நேற்றுக் கட்டளை பிறப்பித்துள்ளது.

குறித்த இடமாற்றம் எதிர்வரும் 25ஆம் திகதி தொடக்கம் நடைமுறைப் படுத்தப்படும் என்று வடக்கு மாகாண சபை முன்னர் அறிவித்திருந்தது. அதற்கு எதிராக வடக்கு மாகாண அம்புலன்ஸ் சாரதிகள் யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றில் சட்டத்தரணி சாரா ஹரிப் பிரவீன் மூலமாக எழுத்தாணை மனுத் தாக்கல் செய்திருந்தனர். அதனைப் பரிசீலித்த மேல்நீதிமன்று, இடமாற்றத்தை நடைமுறைப்படுத்தத் தடைவிதிக்கவில்லை. அதற்கு எதிராக அகில இலங்கை மாகாண சுகாதார சேவைகள் சாரதிகள் தொழிற்சங்கத்தினர் மேன்முறையீட்டு நீதிமன்றில் நேற்றுமுன்தினம் மீளாய்வு மனுத் தாக்கல் செய்தனர்.

குறித்த மனு நேற்றுமுன்தினம் ஆதரிக்கப்பட்டு கட்டளைக்காக நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது. அதன்போதே இடமாற்றத்துக்கு 25ஆம் திகதிவரை இடைக்காலத் தடை விதிக்கப்பட்டது.

வடக்கு மாகாண பிரதம செயலர் உட்பட 12 பேர் மனுவில் எதிர்மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். தொழிற்சங்கத்தினர் மற்றும் உறுப்பினர்கள் சார்பில் சட்டத்தரணி சிறிரங்கநாதன் ராகுலின் அனுசரணையில் சட்டத்தரணி கா. நசிகேதன் மற்றும் சிரேஷ்ட சட்டத்தரணி கே.வி.எஸ்.கணேசராஜா ஆகியோர் மன்றில் முற்பட்டனர்.

இந்த வழக்கு எதிர்வரும் 25ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. அன்றைய தினம் மனுதாரர்களும் எதிர்மனுதாரர்களும் மன்றில் முன்னிலையாகவேண்டும் என்றும் நீதிமன்று பணித்துள்ளது. (த)

## தடுப்பூசியைப் பெற 50 மில். அமெ. டொலர்

நிதி அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, பெப். 13

இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் 'ஒக்ஸ்போர்ட்' தடுப்பூசிகளைக் கொள்வனவு செய்வதற்காக 50 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நிதி மூலம் 90 லட்சம் கொவிட் 19 தடுப்பூசிகள் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

தடுப்பூசிகளைக் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று நிதி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் ஆர். ஆட்டிகல தெரிவித்தார்.

இராஜதந்திரமட்ட நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டதன் பின்னர் தடுப்பூசிகள் இறக்குமதி செய்யப்படும் என்று அவர் தெரிவித்தார்.

இதேவேளை, எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி தொடக்கம் நாளாந்தம் 6 இலட்சம் கொரோனாத் தடுப்பூசிகளை நாட்டு மக்களுக்கு ஏற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கொரோனாத் தடுப்பு மற்றும் ஆரம்ப சுகாதாரம் தொடர்பான இராஜாங்க அமைச்சின் செயலாளர் விசேட மருத்துவ நிபுணர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார். (த-இ)

## வடிசாராயம் உற்பத்தி: அதிகாலை இருவர் கைது



கொழும்பு, பெப். 13

வடமராட்சி செம்பியன்பற்று பகுதியில் சட்டத்துக்குப் புறம்பாக வடிசாராய உற்பத்தியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் இருவர் சிறப்பு அதிரடிப் படையினரால் நேற்று அதிகாலை கைதுசெய்யப்பட்டனர்.

இருவேறு இடங்களில் நடத்தப்பட்ட சுற்றுக்காவல் நடவடிக்கையின் போதே இருவரும் கைதுசெய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

25 வயதுடைய நபரிடமிருந்து 45 லீற்றர் வடிசாராயமும் அதனைத் தயாரிப்பதற்கான உபகரணங்களும் கைப்பற்றப்பட்டன.

மற்றொரு சம்பவத்தில் 65 வயதுடைய ஒருவரிடமிருந்து வடிசாராயம் தயாரிப்பதற்கான உபகரணங்கள் கைப்பற்றப்பட்டன. இருவரும் சட்ட நடவடிக்கைக்காக அதிரடிப்படையினரால் பளைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். (த-26)

## பொத்துவிலுக்கு புதிய தவிசாளர்

அம்பாறை, பெப். 13

பொத்துவில் பிரதேச சபையின் புதிய தவிசாளராக அப்துல் றஹீம் நேற்றுத் தெரிவுசெய்யப்பட்டார்.

இந்த வருடத்துக்கான பாதீடு இருமுறை தோற்கடிக்கப்பட்டதையடுத்து, புதிய தவிசாளரைத் தெரிவுசெய்யும் நடவடிக்கை நேற்று நடைபெற்றது. அதன்போதே அப்துல் றஹீம் தெரிவு செய்யப்பட்டார்.

இவர், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிலிருந்து வெளியேறி அகில இலங்கை மக்கள் காங்கிரஸில் இணைந்து போட்டியிட்டிருந்தவர். (த-319)

## பி.சி.ஆர். இயந்திரங்கள் உடைப்பு; பாதிப்பு எண்ணிக்கை அதிகரிப்பு

கூறுகின்றார் இராணுவத்தளபதி

கொழும்பு, பெப். 13

மஹியங்கனையில் இரு தொழிற்சாலைகளில் பரவிய கொரோனாத் தொற்று மற்றும் பி.சி.ஆர். இயந்திரங்கள் பழுதானமை காரணமாகவே அண்மைய நாள்களில் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை அதிகமாக பதிவாகியுள்ளது என்று கொவிட் தடுப்பு செயலணியின் தலைவரான இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகமொன்றுக்குக் கருத்து வெளியிட்டுள்ள அவர், "மஹியங்கனையில் உள்ள இரண்டு தொழிற்சாலைகளில் அதிக எண்ணிக்கையிலான ஊழியர்கள் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது கண்டறியப்பட்டுள்ளது.

அதேநேரம், அநுராதபுரத்தில் ஓர் இயந்திரம் உட்பட பல பி.சி.ஆர். இயந்திரங்கள் உடைக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது கொரோனாவால் பாதிக்கப்பட்ட நபர்களின் மாதிரிகளைப் பரிசோதிப்பதில் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. இதனால் பி.சி.ஆர். முடிவுகள் மொத்தமாகஅறிவிக்கப்படுகின்றன. அதனாலேயே தொற்றாளர்களின் தொகை அதிகமாகத் தெரிகின்றது. சில நாள்களில் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை குறையும்.

இதேவேளை, இலங்கையில் கொரோனாவால் உயிரிழப்பவர்களின் சடலங்களை அடக்கம்செய்ய அனுமதிப்பது குறித்து பிரதமர் மஹிந்த ராஜபக்ச சமீபத்தில் நாடாளுமன்றத்தில் அறிவித்திருப்பது குறித்து கொவிட் தடுப்புக்கான தேசிய செயல்பாட்டு மையத்துக்கு அறிவிக்கப்படவில்லை. எனவே சடலங்களை அடக்கம் செய்வது பற்றி எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை "என்றும் இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார். (த-இ)

## ஆணின் சடலம் மீட்பு

சாவகச்சேரி, பெப். 13

நீண்ட காலமாக புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்த குடும்பத்தலைவர் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் கொடிகாமம் நாகநாதர் வீதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த 58 வயதுடையவரே சடலமாக மீட்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

அவர் புற்றுநோய்க்கு சிகிச்சை பெற்றுவந்தவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சி.சி.இளங்கீரன் இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை நடத்தினார். (த-9)

# சட்டங்களைத் திருத்த உபகுழுக்கள் நியமனம்



**கொழும்பு, பெப். 13**

**புதிய அரசமைப்பைத் தயாரிக்கும் பணியில் நிபுணர்கள் குழு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. அதேநேரத்தில், தண்டனைச் சட்டம், சிவில் சட்டம் மற்றும் வர்த்தகச் சட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்வதற்காக 3 உபகுழுக்கள் செயற்படுகின்றன என்று நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.**

நீதி அமைச்சின் ஆலோசனைக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்திலேயே அவர் இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டினார்.

தண்டனைச் சட்டம் மற்றும் நீதியின் எண்ணக்கரு என்பவை ஒன்றுடன் ஒன்று பிணைக்கப்பட்டிருப்பதுடன், ஒரு நபரை குற்றவாளி என்று முத்திரை குத்துவதை விட, பொறுப்புள்ள பிரஜையாக சமூகத்தில் ஒப்படைப்பது முக்கியமானது என்று நாடாளுமன்ற உதவிச் செயலாளர் நாயகம் இந்தக் குழுவில் தெரிவித்தார்.

இந்த இலக்கை அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் இரண்டு சக்கரங்களின் ஊடாக அடைய முடியும் என்றும், நாடாளுமன்ற உதவிச் செயலாளர் நாயகம் சுட்டிக்காட்டினார். தேவையான சீர்திருத்தங்களை நோக்கிக் கொண்டுசெல்வதற்கான அரசியல் தலைமைத்துவத்தை உள்ளடக்கிய அரசியல் சக்கரம் காணப்படுகிறது. இரண்டாவது சக்கரமாக உரிய மறுசீரமைப்பை ஏற்படுத்துவதற்கு பல்வேறு துறைகளில் தமது நிபுணத்துவத்தை வழங்குவதற்கான துறைசார் விற்பனர்கள் மற்றும் அதிகாரிகள் காணப்படுகின்றனர் என்றார்.

11 ஆயிரம் பேர் இருக்கக் கூடிய சிறைச்சாலைகளில் 33 ஆயிரம் பேர் வரையில் உள்ளனர் என நீதி அமைச்சர் அலி சப்ரி சுட்டிக்காட்டினார்.

அண்ணளவாக 8 ஆயிரம் பேர் மாத்திரம் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டுள்ளனர். ஏனையோர் தடுப்புக் காவலில் உள்ளனர். போதைப்பொருள் குற்றங்களுடன் கைதுசெய்யப்பட்டவர்களில் 99 சதவீதமானவர்கள் 2.5 கிராம் போதைப் பொருளை வைத்திருந்தவர்களாவர். இவ்வாறான சிறிய வழக்குகளால் மிகப் பெரிய போதைப் பொருள் வழக்குகள் நீதிமன்றங்களில் விசாரணைக்காகத் தேங்கியுள்ளன.

அதேநேரம், போதைக்கு அடிமையான வர்களை மிகப் பெரிய போதைப்பொருள் குற்றவாளிகளுடன் இணைவதற்கு அனுமதித்து அவர்களை மிகப் பெரிய போதைப்பொருள் குற்றவாளிகளாக்குவதைவிட, சமுதாயம்சார் சீர்திருத்தம் மிகவும் முக்கியமானது என்றும் அமைச்சர் அலி சப்ரி இதன்போது குறிப்பிட்டார்.

வர்த்தகப் பெறுமதிமிக்க இடங்களில் உள்ள வெலிக்கடை சிறைச்சாலை, பெண்கள் சிறைச்சாலை மற்றும் புதிய மகசின் சிறைச்சாலை என்பனவற்றை தற்பொழுதிருக்கும் அளவைவிட 10 மடங்கு விஸ்தீரணம் கொண்டதாக ஹொரணையில் அமைப்பதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபை 250 ஏக்கர் நிலப்பரப்பை வழங்கியிருக்கிறது என இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த தெரிவித்தார். (ஒ-இ)

## சமுர்த்தி சங்கத்தின் நிறைவேற்று குழுக்கூட்டம்!

சாவகச்சேரி, பெப்.13

சாவகச்சேரி சமுர்த்தி மாசங்கத்தின் நடப்பு வருட நிறைவேற்றுக் குழுத் தெரிவுக் கூட்டம் நேற்று தென்மராட்சி பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதேசத்தில் உள்ள நான்கு சமுர்த்தி வலயங்களின் கட்டுப்பாட்டுச் சபைகளிலிருந்து தலா 15 பிரதிநிதிகள் வீதம் 60 பேர் பங்குபற்றியிருந்தனர். இவர்களில் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களாக ஏழு பேர் தெரிவு செய்யப்படவுள்ளனர் எனத் தெரிவிக்கப் பட்டது.

இந்தக் கூட்டத்தில் யாழ்.மாவட்டப் பணிப்பாளர் தி.விஸ்வரூபன், பிரதேச செயலர் உ.சுபலிங்கம், பிரதேச சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் க.விக்கினேஸ்வரன், பிரதேச மாசங்க முகாமையாளர் உமாதேவி ஆறுமுகம் உட்பட பிரதேசத்தைச் சேர்ந்த நான்கு சமுர்த்தி வலயங்களின் முகாமையாளர்களும் கலந்து கொண்டனர். (ர-9)

## ஜனாஸாக்கள் அடக்கம் ; அனுமதிக்கு நாமே காரணம்!

*உரிமை கோருகின்றது உலமா கட்சி*

கொழும்பு, பெப். 13

ஜனாஸாக்களை அடக்கம் செய்யும் விடயத்தில் எம்மைத்தவிர எவரும் உரிமை கோர முடியாது. கடந்த காலங்களில் இடங்களை அடையாளப்படுத்தித் தருமாறு அரசு கேட்டிருந்ததுடன் திட்டமிட்டபடி அரசு ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கான முயற்சிகளை நாம் மேற்கொண்டிருந்ததைக் காணமுடியும் என்று உலமா கட்சித் தலைவர் மௌலவி முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்தார்.

அம்பாறையின் கல்முனை பகுதியிலுள்ள உலமா கட்சி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

உலமா கட்சியினராகிய நாங்கள் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பங்காளிக் கட்சியாக இருக்கின்றோம். பிரதமர் மஹிந்த ராஜபக்ச, ஜனாஸாக்களை அடக்கம் செய்ய அனுமதிக்கப்படும் என்று கூறியிருந்தார். அதற்கான கோரிக்கைகளை நாங்களே அரசிடம் வலியுறுத்தியிருந்தோம். இந்தவிடயம் தொடர்பில் வர்த்தமானி அறிவிப்பை அரசு மேற்கொள்ள வேண்டும். - என்றார். (த-இ)

## உறுப்பினர்கள் நீக்க விவகாரம்; சறுக்கியது மக்கள் முன்னணி!

யாழ்ப்பாணம், பெப். 13

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியிலிருந்து உறுப்பினர்கள் நீக்கப்படுவர் என அறிவிக்கப்பட்டதற்கு அமைவாக நடவடிக்கை எடுக்க முடியாது. அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸிலிருந்து அவர்கள் நீக்கப்படுகின்றனர் என அறிவிக்கப்பட்டாலே அதனை ஆராய முடியும். இவ்வாறு யாழ்ப்பாண மாவட்ட உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் கி.அமல்ராஜ் குறிப்பிட்டுள்ளார். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலர் செ.கஜேந்திரனுக்கு அனுப்பிய கடிதத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர்கள், நல்லூர் பிரதேச சபை உறுப்பினர்கள் என்று 9 பேர் கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அறிவித்திருந்தது. இதற்கு அமைவாக, அவர்களை உள்ளூராட்சிமன்ற உறுப்புரிமைகளிலிருந்து நீக்குமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலர் செல்வராஜா கஜேந்திரன், யாழ்ப்பாண மாவட்ட உதவித் தெரிவத்தாட்சி அலுவலருக்கு கடிதம் அனுப்பி வைத்திருந்தார்.

அதற்குப் பதிலளித்துள்ள உதவித் தெரிவத்தாட்சி அலுவலர், உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சார்பிலேயே அவர்கள் போட்டியிட்டிருந்தனர். அந்தக் கட்சியிலிருந்து அவர்கள் நீக்கப்படுகின்றனர் என்று அறிவித்தால் மாத்திரமே பரிசீலிக்க முடியும் என்று குறிப்பிட்டுள்ளார். (ஒ-5)

## புதிய வகுப்புக்களுடன் நகர்சேர் கடுகதி ரயில்

யாழ்ப்பாணம், பெப். 13

யாழ்ப்பாணம் கொழும்பு இடையே குளிரூட்டப்பட்ட நகர்சேர் கடுகதி சேவையில் ஈடுபடும் ரயில், புதிய வகுப்புக்கள் இணைக்கப்பட்ட சேவையுடன் கொழும்பிலிருந்து புறப்பட்டு யாழ்ப்பாணத்தை நேற்றுப் பிற்பகல் வந்தடைந்தது. இந்தச் சேவை தினமும் இடம்பெறும் என்று யாழ்ப்பாணம் ரயில் நிலையப் பிரதான அதிபர் தி.பிரதீபன் தெரிவித்தார்.

கல்கிசையிலிருந்து தினமும் அதிகாலை 5.10 மணிக்கு ஆரம்பமாகும் குளிரூட்டப்பட்ட நகர்சேர் ரயில் சேவை புறக்கோட்டையிலிருந்து அதிகாலை 5.30 மணிக்கு புறப்பட்டு நண்பகல் 11.30 மணிக்கு யாழ்ப்பாணத்தை வந்தடையும். காங்கேசன்துறையை 12.30 மணிக்குச் சென்றடையும்.

காங்கேசன்துறையிலிருந்து பிற்பகல் 1.15 மணிக்கு புறப்படும் ரயில், யாழ்ப்பாணம் பிரதான ரயில் நிலையத்திலிருந்து பிற்பகல் 1.37 மணிக்கு கொழும்பு நோக்கிச் செல்லும்.

இந்தச் சேவையில் இதுவரை குளிரூட்டப்பட்ட வகுப்புக்களே காணப்பட்டன. எனினும் நேற்று முதல் இந்தச் சேவையில் இரண்டாம் வகுப்பில் 2 பெட்டிகளும் மற்றும் மூன்றாம் வகுப்பில் ஒரு பெட்டியுமாக 3 மேலதிக பெட்டிகள் இணைக்கப்பட்டு 7 பெட்டிகளில் பயணிகள் ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. குளிரூட்டப்பட்ட முதலாம் வகுப்புக்கு ஆயிரத்து 700 ரூபாவும், இரண்டாம் வகுப்புக்கு ஆயிரம் ரூபாவும், மூன்றாம் வகுப்புக்கு 700 ரூபாவும் கட்டணம் அறவிப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்த ரயில் சேவைக்கு சகல ஆசனங்களும் முற்பதிவு செய்யப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. (ஒ-இ)




### மாணவனுக்கு அறை: செவிடானது காது

## ரூ. 6.5 லட்சம் இழப்பீடு செலுத்துமாறு அரசுக்கும் ஆசிரியருக்கும் உத்தரவு

கொழும்பு, பெப். 13

உடல் ரீதியான தண்டனை காரணமாக செவிப்புலன் திறனை இழந்த மாணவர் ஒருவருக்கு இழப்பீடாக 6 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலுத்தவேண்டும் என்று உயர்நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது. அரசு மற்றும் ஆசிரியர் இணைந்து இழப்பீடு செலுத்தவேண்டும். அதாவது, அரசு 5 லட்சம் ரூபா இழப்பீட்டையும் மாணவரை அறைந்த ஆசிரியர் தனிப்பட்ட நிதியைப் பயன்படுத்தி ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை 6 மாதங்களுக்குள் செலுத்த வேண்டும் என்றும் உயர்நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

2017ஆம் ஆண்டு நடந்த இந்தச் சம்பவம் தொடர்பாக மாணவரின் பெற்றோர் மாத்தறை பொலிஸ் நிலையத்தில் ஆசிரியர் மீது வழக்குப் பதிவு செய்தனர். ஆசிரியரின் தண்டனை காரணமாக அந்த மாணவர் வாழ்க்கையில் காது கேட்கும் திறனை இழந்துவிட்டார் என்று மருத்துவ அறிக்கை தாக்கல் செய்யப்பட்டநிலையில், மேற்குறித்த தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (த-இ)

## சிங்கள நடிகர் காலமானார்

கொழும்பு, பெப். 13

இலங்கை சினிமா வரலாற்றில் தடம் பதித்த பிரபல நடிகர் ஜயலால் ரோஹண நேற்று உயிரிழந்தார்.

ராகம மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த இவர் தமது 56 ஆவது வயதில் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ய-இ)

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனம் திங்களன்று திறப்பு!

கொடிகாமம், பெப்.13

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் (தனியார்) நிறுவனத்தின் வடக்கு மாகாணப் பிரதி அலுவலகம் நாளைமறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு இல 56, சப்பல் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள கட்டடத்தில் திறக்கப்படவுள்ளது.

நிறுவனத்தின் தவிசாளர் மேஜர் சுதத் அபேசிங்கவினதும் பணிப்பாளர் சபையினதும், அழைப்பின் பேரில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாடு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர் பியங்கர ஜயரத்னவின் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது. (ற-159)



## லுணுகலவில் நில அதிர்வு

பதுளை, பெப். 13

லுணுகலை ஹெக்கிரிய பகுதியில் நேற்று அதிகாலை நிலஅதிர்வு ஏற்பட்டுள்ளது என புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்தின் தலைவர் அநுர வல்பொல தெரிவித்தார்.

ஒரு ரிச்டர் அளவுக்கும் குறைந்த சிறிய அளவிலான நில அதிர்வே பதிவாகியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ய-இ)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,பெப்.13

யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையின் ஏற்பாட்டில், ஆலய பரிபாலன சபையினருக்கான கருத்தரங்கு, நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு பேரை நடராஜர் மண்டபத்தில் இடம்பெறும். (க)

# தூக்குத் தண்டனையை நிறைவேற்றத் தொடரும் தடை

**கொழும்பு, பெப். 13**

**போதைப்பொருள் குற்றவாளிகளுக்குத் தூக்குத் தண்டனையை நிறைவேற்ற ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேன முன்னெடுத்த முயற்சி களுக்கு விதிக்கப்பட்ட தடை உத்தரவு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 7ஆம் திகதி வரையில் நீடிக்கப்பட்டுள்ளது.**

உயர் நீதிமன்றத்தில் இந்த வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன பதவி வகித்தபோது, போதைப்பொருள் குற்ற வாளி களுக்குத் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படவேண்டும் என்று குறிப்பிட்டு அதற்குரிய நகர்வுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இதனை எதிர்த்து 15 தரப்புக்கள் உயர் நீதிமன்றத்தில் மனுக்களைத் தாக்கல் செய்திருந்தன. இந்த மனுக்கள் மீதான நேற்றைய விசாரணையின்போதே எதிர்வரும் செப்ரெம்பர் 7ஆம் திகதி வரையில் தடை உத்தரவு நீடிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த மனுக்களில் பெயர் குறிப்பிடப்பட்ட சில தரப்பினர் மாற்றலாகியுள்ளதால் மனுக்களில் திருத்தம் மேற்கொள்ளவும் மன்று அனுமதித்துள்ளது. (ஒ,இ)



‘2020 நேர்மைக்கான மகுடம்’ என்ற விருதைப் பெற்றமைக்காக, யாழ்ப்பாணம் பிரதேச செயலர் சா.சுதர்சன், வை.எம்.சீ.ஏ. நிறுவனத்தால் கௌரவிக்கப்பட்டார். அவரை, நிறுவனத்தின் தலைவர் இ.வினோத், பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். (க)

## உடல்களை எரிக்கும் முடிவில் எந்தவித மாற்றமும் இல்லை!

*சுகாதார அமைச்சின் தொழில்நுட்பக் குழு திட்டவட்டம்*

கொழும்பு, பெப்.13

கொரோனாவால் மரணிப்பவர்களின் உடல்களைத் தகனம் செய்ய வேண்டும் என்ற சுகாதார அமைச்சின் தொழில்நுட்பக் குழுவின் தீர்மானத்தில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை என்று அந்தக் குழுவின் தலைவர் சட்ட மருத்துவ அதிகாரியான சன்ன பெரேரா தெரிவித்தார்.

கொரோனாவால் மரணிக்கும் முஸ்லிம்களின் உடல்களை அடக்கம் செய்வதற்கு அனுமதியளிக்கப்படும் என்று கடந்த புதன்கிழமை நாடாளுமன்றத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ச அறிவித்திருந்த நிலையில், அது தொடர்பான தீர்மானங்களை விடயத்துடன் தொடர்புடைய தொழில்நுட்பக் குழுவே எடுக்க வேண்டும் என்று இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் குறித்த தொழில்நுட்பக் குழுவின் தலைவர் சன்ன பெரேரா கருத்துத் தெரிவிக்கையில், அரசியல் தீர்மானங்களுக்காக எங்களின் நிலைப்பாட்டை மாற்றியமைக்க முடியாது. விசேட மருத்துவ நிபுணர்களைக் கொண்ட குழுவால் எடுக்கப்படும் தீர்மானங்களை ஆட்சியாளர்கள் மாற்ற முடி யும். அதற்கு எமது குழுவால் எதிர்ப்பு வெளியிட முடியாது. ஆனால், எமது குழுவின் தீர்மானத்தை அரசியல் காரணங்களுக்காக மாற்றியமைக்க முடியாது. கொரோனாத் தொற்றால் உயிரிழப்பவர்களின் உடல்களைத் தகனம் செய்ய வேண்டும் என்ற சுகாதார அமைச்சின் தொழில்நுட்பக் குழுவின் தீர்மானத்தில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை - என்றார். (வ-22)

## மாணவர்களுக்கான உணவுக் கலாசாரம்

*திட்டத்தை முன்மொழிந்தது மருத்துவ அதிகாரிகள் சங்கம்*

கொழும்பு, பெப். 13

பாடசாலை மாணவர்களை சரியான உணவுக் கலாசாரத்துக்கு எவ்வாறு வழிநடத்துவது என்பது தொடர்பான விசேட திட்டங்களை கல்வி அமைச்சுக்கு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சமர்ப்பித்துள்ளது.

பாடசாலை மாணவர்கள் சரியான உணவுக் கலாசாரத்துக்கு வழி நடத்தப்படாவிட்டால், இலங்கையின் எதிர்கால சுகாதார குறிகாட்டிகள் வெகுவாக மோசமடையும் என்று அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஒ,இ)

## உரிய வழிமுறைகள் கிடைத்த பின்பே ஜனாஸா எரிப்பு தொடர்பில் தீர்மானம்

*சுகாதார அமைச்சு தெரிவிப்பு*

கொழும்பு, பெப்.13

கொவிட்19 காரணமாக மரணிப்போரின் ஜனாஸாக்களை அடக்கம் செய்வது தொடர்பான தீர்மானம், சுகாதார அமைச்சின் மூலம் உரிய வழிமுறைகள் கிடைக்கப்பெற்ற பின்னரே செயற்படுத்தப்படும் என சுகாதார அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

மேலும், நாடாளுமன்றில் பிரதமர் தெரிவித்த கருத்து தொடர்பிலேயே தற்போது தகவல் கிடைத்துள்ளது. இவ்வாறான தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும்போது சுகாதார அமைச்சின் ஊடாக உரிய முறைமைகளுடனான வழிகாட்டல்கள் வழங்கப்படும். இதற்கமையவே மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார். (ந-இ)

## பிரதமரின் கருத்து சட்டம் ஆகாது

*மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவிப்பு*

கொழும்பு, பெப்.13

இலங்கையில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் உடல்களை அடக்கம்செய்ய அனுமதிப்பது தொடர்பான அறிவிப்பை நிபுணர்களின் பரிந்துரைப்படியே பிரதமர் தெரிவித்திருக்க வேண்டும். அவரின் கருத்து சட்டமல்ல என அரசு மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சங்கத்தின் தலைவர் ஹரித அலுத்கே தெரிவித்துள்ளதாவது:

கொரோனா தொடர்பாக உலகெங்கிலும் உள்ள நடைமுறைகளை அவதானித்தால், வெளிநாடுகளில் கடுமையான நிபந்தனைகளின் கீழ் அடக்கம் செய்வது பிரச்சினைக்கான தீர்வாகக் கருதப்படலாம். பிரதமர் தெரிவித்திருப்பது சட்டம் அல்ல, இது தொடர்பாக வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்ட பின்னரே இந்த முடிவை செயல்படுத்த முடியும் என்று தெரிவித்தார். (வ-இ)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## "நல்ல நாடு, நல்ல அரசு ஆனால் பாவம் மக்கள்."

கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம் சமூகத்தவர்களின் ''ஜனாஸா'' தொடர்பான விவகாரம் இன்னும் இழுபறியாகவே இருக்கின்றது. அதனால் அந்த விடயம் நியாயம் கோரி, ஐ.நா. மனித உரிமை ஆணையத்துக்கு கொண்டு செல்லப்படும் நிலை தோன்றியுள்ளது. இந்நிலையில் கடந்த மூன்று நாள்களாக நாட்டின் அதிகாரபீடத்தவர்களால் அந்த விடயம் கையாளப்பட்டு வரும் விதமானது அதனை மேலும் சிக்கலாக்கியுள்ளது.

ஒரு இனத்தின் பண்பாடு - பாரம்பரியம் மற்றும் சமூக வாழ்வியல் காரணத்துடன் சம்பந்தப்பட்ட, குறிப்பாக மத அடிப்படையிலான அதீத உணர்வு பூர்வமான நெருக்கடிகளைக் கையாள்வதில் ஒரு அரசு எவ்வாறான அணுகுமுறைகளை கையாளக் கூடாதென்பதற்கு ஜனாஸா விவகாரத்தில் இலங்கை அரசாங்கம் மேற்கொண்டு வரும் நகர்வுகள் வெறுக்கத்தக்க உதாரணங்களாக அமைந்துள்ளன.

கடந்த பல மாதங்களாகவே இஸ்லாமிய மதத்தவரை வெளிப்படையாகவே மத அடிப்படைவாதிகளாக இனங்காட்டி ஒதுக்கும் நிலையே உள்ளது. இத்தகைய நிலைக்கு பௌத்த சிங்களப் பேரினவாதச் சக்திகளும், அவற்றுக்கு பின்புலத்தில் அரசாங்கமுமே இருப்பதாக நம்பப்படுகிறது. தொடர்ச்சியாக முஸ்லிம்கள் மீதான அடக்குமுறைகள் வெவ்வேறு வடிவங்களில் தொடர்வதால், தாங்களும் இந்நாட்டில் வெறுத்தொதுக்கப்படும் சிறுபான்மை இனத்தவரென அவர்கள் உணரும் நிலையொன்று உருவாகியுள்ளது.

இது வெறும் ஊகத்தின் அடிப்படையிலான கருத்தியல் அல்ல ,உண்மையும் அதுதான் என்பதை ஈஸ்டர் தாக்குதலுக்கு பின்னரான சகல நகர்வுகளும் நிரூபணமாக்கியுள்ளன. இத்தகையதொரு நிலையை தென்பகுதிப் பேரினவாத ஆட்சியாளர்களுடன் கைகோர்த்து, இணக்க அரசியலைக் காலம் காலமாக முன்னெடுத்து வந்த முஸ்லிம் தலைமைகளே எதிர்பார்த்திருக்கவில்லை.

பெரும்பான்மை இனத்தவரோடு தாமும் ஒரு இறுக்கமான அங்கமாகவே அரசியல் அதிகாரத்தை ஒட்டியிருந்து, பகிர்ந்து கொண்டு, காலை ஆட்டியபடி காலத்தை ஓட்டிவிடலாம் என்ற முஸ்லிம்களின் எண்ணம், பௌத்த சிங்களப் பேரினவாத சக்திகளால் சிதைந்து போயுள்ளமை கண்கூடு.அதுவும் கொரோனாவின் ஆக்கிரமிப்புக் காரணமாக ஏற்பட்ட அவலங்கள் இஸ்லாமிய கலாசார வாழ்வியல் கோட்பாட்டின் ஆத்மாவையே புறந்தள்ளிவிடும் என எவரும் எதிர்பார்த்திருக்க முடியாது.

கொரோனாவின் பெயரால் ஜனாஸா எரிப்பு விவகாரம் அவர்களின் கலாசாரத்தை நிர்மூலமாக்கும் ஒன்றாகப் பூதாகாரம் எடுத்த விடயம் உலகறிந்த ஒன்றேயாகும்.இது முஸ்லிம் மக்களின் அடிப்படை மனித உரிமை மீறல் விடயமாகவே சர்வதேசத்தால் பார்க்கப்படுகிறது.

பல காலப் போராட்டத்தின் பின்னர் இந்த விவகாரத்துக்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்பதுபோன்று பிரதமர் மகிந்த ராஜபக்ச நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரை அமைந்தது. இரு தினங்களின் முன்னர் கொரோனாத் தொற்றால் இறந்தவர்களின் ஜனாஸாக்களை அடக்கம் செய்ய அனுமதி வழங்கப்படும் எனப் பகிரங்கமாக அறிவித்தபோதும் இஸ்லாமிய சமூகத்தவர் மட்டுமல்ல ஏனைய மக்களும் ஏன் அமெரிக்கா, பிரிட்டன் போன்ற பலநாடுகளும் மனித உரிமை அமைப்புகளும் கூட அதனை வரவேற்று அறிக்கையிட்டன.

ஆனால் மஹிந்த அறிவிப்புக்கு அரச தரப்பில் எந்தவித அங்கீகாரமும் கிடைக்காமல் போனது அரசில் அவரின் கருத்துக்கு எத்தகைய மரியாதை இருக்கிறது என்பதை நிரூபணம் செய்திருக்கிறது. அவரின் செயற்பாட்டை வரவேற்று, பாராட்டி, புகழ்ந்தோர் வாய்மூடி மௌனிகளாகியுள்ளனர்.ஜனாஸா அடக்கத்துக்கான அனுமதி குறித்துத் தமக்கு எதுவும் தெரியாது என சுகாதார அமைச்சு அலுவலக அதிகாரிகள் கைவிரித்துவிட்டனர்.


மஹிந்தவின் தலைமையிலான பொதுஜன பெரமுன கட்சியே அவர் இவ்வாறு எதுவும் சொல்லவில்லை என்றும் அவர் ஜனாஸாக்களை அடக்கம் செய்யலாம் என்றுதான் சொன்னார் என்றும் 'பகிடி' விட்டுள்ளது. கொரோனாவால் மரணமடைவோர் என்று அவர் குறிப்பிடவில்லையாம் என்றும் அக் கட்சி மேலும் தெரிவித்துள்ளது.

இது பற்றி மஹிந்தர் எதுவும் மறுப்புக் கூறாதது நாட்டின் ஆட்சிபீடம் மீதான நம்பிக்கையீனத்தை வெளிப்படுத்துவதுடன் அதன் பொறுப்பின்மையையும் அம்பலப்படுத்துவதாக அமைகிறது.இதே போன்று கடந்த வாரம் மஹிந்தவால், வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் ஒன்று, 'மேலிடத்து உத்தரவால்' உடனடியாகவே ரத்துச் செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இந்த நாட்டில் என்னதான் நடக்கிறது? ஜனாதிபதியும் பிரதமரும் இணைந்து ஆட்சி நடத்துகிறார்களா? அல்லது தனித்தனியாகவா? உடன்பாடுகளுடன் கலந்தாலோசனையின் பின்னர் தீர்மானங்கள் எடுக்கப்படுவதில்லையா? என்றெல்லாம் மக்கள் மனதில் கேள்விகள் எழுகின்றன. அது தொடர்பாக மக்கள் பல சந்தேகங்களை எழுப்புகின்றனர். இந்தச் சந்தேகங்கள் அதீத அதிகார பலம் கொண்ட ஆட்சியில் எங்கோ விரிசல் ஏற்படத் தொடங்கியுள்ளதாகவே எண்ண வைக்கின்றது.

"நல்ல நாடு, நல்ல அரசு ஆனால் பாவம் மக்கள்." என்று திரைப்படமொன்றில் வரும் வசனம்தான் இலங்கையின் இப்போதைய ஆட்சியின் சீத்துவக்கேட்டை பார்க்கும் போது நினைவுக்கு வருகிறது.

### இன்றைய கருத்தோவியம்



நன்றி - அவந்த ஆட்டிகல

# ஈஸ்டர் தாக்குதல் அறிக்கைகள் மூடி மறைக்கப்பட மாட்டாது!

## ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவிப்பு

**கொழும்பு, பெப்.13**



**ஈஸ்டர் தாக்குதல்கள் மற்றும் அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுக்களின் விசாரணை அறிக்கைகளை மூடி மறைக்க மாட்டோம். கூடிய விரைவில் சபையில் முன்வைப்போம் இவ்வாறு ஆளுங் கட்சி பிரதம கொறடாவும், அமைச்சருமான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.**

அறிக்கைகளை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு ஏன் தாமதம் ஏற்பட்டுள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவால் நாடாளுமன்றத்தில் நேற்று எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அறிக்கைகள் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும், விவாதத்துக்கு நாள் வழங்கப்படும் என சபை முதல்வர் குறிப்பிட்டார். அதுவே அரசின் நிலைப்பாடு. ஜனாதிபதி ஆணைக்குழுக்களின் விசாரணை அறிக்கைகள் நாடாளுமன்றத்துக்கு முன்வைக்கப்படாமல் மறைக்கப்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. நாம் அவ்வாறு செய்ய மாட்டோம். மூடி மறைக்க மாட்டோம். அறிக்கைகள் கூடிய விரைவில் முன்வைக்கப்படும். ஆளுங்கட்சி உறுப்பினர்களும் இதனையே விரும்புகின்றனர்- என்றார்.

(ந-44)

## வாகனங்கள் ஏதுமில்லாமல் 35 பொலிஸ் நிலையங்கள்!

கொழும்பு, பெப். 13

ஒரு வாகனம் கூட இல்லாமல் நாட்டில் 35 பொலிஸ் நிலையங்கள்இயங்குகின்றன என்று பாதுகாப்பு அமைச்சால் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பில் தெரிய வந்துள்ளது.

குறித்த 35 பொலிஸ் நிலையங்களும் மைத்திரி - ரணில் அரசின் காலத்தில் அமைக்கப்பட்டவை. வாகனங்கள் இல்லாததால் கடமைகளைச் சரிவரச் செய்ய முடியாதுள்ளது என்று அந்தப் பொலிஸ் நிலையங்களின் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இதையடுத்து குறித்த பொலிஸ் நிலையங்களை அகற்றி அங்கு பணியாற்றிய அதிகாரிகளை வேறு இடங்களுக்கு மாற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-இ)

## இலத்திரனியல் மயமாகும் நீதிமன்றக் கட்டமைப்பு!

கொழும்பு, பெப். 13

நீதிமன்றக் கட்டமைப்பு முழுவதையும் இலத்திரனியல் மயப்படுத்துவதற்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்த உடன்படிக்கை நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கைச்சாத்திடப்பட்டது என நீதியமைச்சு தெரிவித்துள்ளது.

நீதிமன்றக் கட்டமைப்பில் ஆவணங்களைப் பராமரித்தல், முகாமைத்துவம், வழக்குகள் குறித்த அறிக்கைகளை வைத்திருத்தல் மற்றும் விநியோகித்தல் உள்ளிட்ட அனைத்து நீதிமன்ற நடவடிக்கைகளும் இலத்திரனியல் மயப்படுத்தப்படவுள்ளன என்று நீதியமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த வேலைத்திட்டம் நீதியமைச்சு, நீதிச் சேவைகள் ஆணைக்குழு மற்றும் தொழில்நுட்ப அமைச்சு என்பவை உட்பட இலங்கைத் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பிரதிநிதி களுடன் இணைந்து செயற்படுத்தப்படவுள்ளது. (ஒ.இ)

# ஈஸ்டர் தாக்குதலின் சூத்திரதாரிகளை கண்டறிய அரசுக்கு விருப்பமில்லை!

## நிரோஷன் பெரேரா எம்.பி. தெரிவிப்பு



**கொழும்பு, பெப். 13**

**ஈஸ்டர் தாக்குதலின் பிரதான சூத்திரதாரிகளைக் கண்டு பிடிக்க அரசு எந்த முயற்சியையும் மேற்கொள்ள வில்லை. இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் நிரோஷன் பெரேரா தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன் தினம் வியாழக்கிழமை உரையாற்றிய போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஈஸ்டர் தாக்குதல் விசாரணையில் நியாயம் கிடைக்காவிட்டால் சர்வதேச நீதிமன்றத்துக்குச் செல்லவேண்டி வரும் என்று கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்திருக்கின்றார்.

தாக்குதலுடன் தொடர்புபட்டவர்களுக்கு எதிராக வழக்குத் தொடுக்க அனைத்து ஆவணங்களையும் சட்டமா அதிபரிடம் கையளித்துள்ளோம் என பொலிஸ் திணைக்களத்துக்குப் பொறுப்பான அமைச்சர் சரத் வீரசேகர நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

ஆனால் சட்டமா அதிபர், பொலிஸ்மா அதிபருக்கு கடிதத்தை அனுப்பி, வழக்குத் தொடுக்கும் அளவுக்கு முறையான விசாரணை இடம்பெறவில்லை. முறையான விசாரணையை மேற்கொள்ளுமாறு அந்த ஆவணங்களை திருப்பி அனுப்பி இருக்கின்றார்.

ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பதாக அரசு ஆட்சிக்கு வரும்போது தெரிவித்திருந்தது. ஒரு வருடமாகியும் அது தொடர்பான விசாரணையைக் கூட முறையாக நடத்த முடியாத அளவுக்கு நிலமை சென்றிருக்கின்றது.

ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அரச தரப்பினர் எமது மதத் தலைவர்களிடம் இது தொடர்பாகப் பல்வேறு தகவல்களைத் தெரிவிக்கின்றபோதும், இந்த விசாரணையை மறைக்க இந்த அரசும் முயற்சிக்கின்றதா என்ற கேள்வி எமக்குள் எழுகின்றது.

இந்தத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரிகளைக் கண்டுபிடிக்க அரசிடமும் எந்த முயற்சியும் இல்லை. குறைந்த பட்சம் இந்தியாவுக்கு தப்பிச் சென்றிருக்கும் சாரா என்ற பெண் தொடர்பாகவேனும் விசாரணை மேற்கொள்ள இவர்கள் முயற்சிப்பதில்லை.

மாறாகத் தாக்குதல் இடம்பெறாமல் தடுப்பதற்குத் தவறினார்கள் என்று சில அரசியல் தலைவர்களைச் சிக்க வைக்க மிகவும் சூட்சுமமாக செயற்படுகின்றதைக் காணமுடிகின்றது.

ஈஸ்டர் தாக்குதலின் பிரதான சூத்திரதாரி, அதன் பின்னணியில் இருந்தவர்கள் மற்றும் அவர்களுக்கு அரசியல் பாதுகாப்பு வழங்கியவர்கள் யார் என்ற விடயங்களை வெளிப்படுத்த வேண்டும்.

இதுதொடர்பாக முறையான விசாரணை மேற்கொள்ளாமல் அரசு மறைக்க முயற்சித்தால், அது மிகப் பெரிய பிரச்சினைக்குக் கொண்டு செல்லும் - என்றார். (ஒ.இ)

## 850 பேர் நாட்டுக்கு வருகை

கொழும்பு, பெப். 13

கொரோனாத் தொற்றுக் காரணமாக வெளிநாடுகளிலிலிருந்து நேற்றுக் காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களுள் 850 பேர் நாட்டுக்கு வந்தடைந்தனர்.

இதன்படி டுபாயிலிருந்து 108 பேரும், சவூதி அரேபியாவிலிருந்து 102 பேரும், ஏனைய நாடுகளில் இருந்து 640 பேரும் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர். விமான நிலையத்தை வந்தடைந்த பயணிகள் தனிமைப்படுத்தலுக்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது. (ய-இ)



## பாரவூர்தி தடம்புரள்வு: ஒருவர் காயம்!

திருகோணமலை, பெப்.13

திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி சீமெந்து ஏற்றிச்சென்ற பாரவூர்தி தடம்புரண்டதில் ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து நேற்று அதிகாலை ஏ-9 வீதி மாங்குளம் பனிக்கன்குளம் பகுதியில் இடம் பெற்றுள்ளது. (ற-214)

## வவுனியாவில் இன்று நீர் வழங்கலில் தடை!

வவுனியா, பெப்.13

வவுனியாவில் நீர் வழங்கல் திட்டத்தில் இன்று சனிக்கிழமை தடை ஏற்படும் என்று நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

அந்தவகையில், வவுனியா நகரம், வைரவப் புளியங்குளம், இறம்பைக்குளம், குடியிருப்பு, யாழ்ப்பாண வீதி, சூசைப்பிள்ளையார் வீதி, சகாயமாதாபுரம், தேக்கவத்தை, கற்குழி, மதவுவைத்தகுளம், குருமன்காடு, மன்னார் வீதி ஆகிய இடங்களில் காலை 10 மணிமுதல் இரவு 10 மணி வரை நீர் வழங்கல் தடைப் படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா நீர் வழங்கல் திட்டத்தின் கீழ் வரும், வவுனியா நகரை அண்டிய பிரதேசங்களிலுள்ள நீரிணைப்புக் குழாய்களில் அவசர மேம்பாட்டை மேற்கொள்ள வேண்டியிருப்பதால் இந்தத் தடை ஏற்படுத்தப்படவுள்ளது. (ற-110)

## உனைஸ் பாரூக்கிடம் சி.ஐ.டி விசாரணை

மன்னார், பெப்.13

வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்டு வேறு மாவட்டங்களில் வசித்து மீண்டும் தமது பழைய இடங்களில் மீள் குடியேறிய மக்களுக்கு எவ்வாறான விதத்தில் காணிகள் வழங்கப்பட்டன என்பது தொடர்பாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் மன்னார் சிரேஷ்ட சட்டத்தரணியுமான உனைஸ் பாரூக் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் முன்னாள் வன்னி நாடாளுமன்ற உறுப்பினரும், மன்னார் சிரேஷ்ட சட்டத்தரணியுமான உனைஸ் பாரூக் கடந்த திங்கட்கிழமை விசாரணைக்கு அழைக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சட்டத்தரணி உனைஸ் பாரூக் தெரிவித்ததாவது;

வடக்கிலிருந்து வேறு மாவட்டங்களுக்குச் சென்று மீண்டும் மீள்குடியேறிய மக்களுக்கு 2010 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரை காணி வழங்கப்பட்டமை தொடர்பாகவே இவ் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. 2015 ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட காணி வழங்கல் குழுவும், அந்தக் குழுவால் நியமிக்கப்பட்ட மற்றுமொரு குழுவும் எவ்வாறு இக் காணி வழங்கல் தொடர்பான உண்மைத் தன்மையை தன்னிடம் விசாரித்தன என்று உனைஸ் பாரூக் தெரிவித்தார். 2018 ஆம் ஆண்டு காடுகளாக்கும் சட்டத்தின் பின்னரா அல்லது முன்னரா இக் காணிகள் வழங்கப்பட்டன என்பதையும், காணி வழங்கிய நிர்வாகம் தொடர்பிலும் இந்த விசாரணைமேற்கொள்ளப்பட்டது. இந்தவிசாரணை சுமார் நான்கரை மணித்தியாலங்கள் நீடித்தது எனவும், மீண்டும் தான் இது தொடர்பாக விசாரணைக்கு அழைக்கப்படும் என்று தனக்கு தெரிவிக்கப்பட்டது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ப-60)



## தொழில்நுட்ப பயிற்சி நிலையம் திறப்பு

இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தின் ஆணமடுவ பிராந்திய நிலையம் பிரதமர் மகிந்த ராஜபக்சவால் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது. சுபீட்சத்தின் நோக்கு கொள்கை திட்டத்தை யதார்த்தமாக்கும் வகையில் திறன் மேம்பாடு, தொழிற்கல்வி ஆராய்ச்சி இராஜாங்க அமைச்சின் வழிகாட்டலின் கீழ் இந்த நிலையம் நிறுவப்பட்டுள்ளது. (வ-இ)

## 4,554 தொற்றாளரின் விவரங்கள் இல்லை

கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்ட சுமார் 4 ஆயிரத்து 554 பேரின் விவரங்கள் விடுபட்டுள்ளன என்று ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்கள் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஸ் தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள தரவுகளுக்கு அமைய, இலங்கையில் இதுவரையில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 76 ஆயிரத்து 728 ஆகும். ஆனால், நேற்று வரையில் இரண்டாம் கட்ட அலையால் பாதிக்கப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 72 ஆயிரத்து 174 என்று தொற்றுநோய் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது. அதன் படி 4 ஆயிரத்து 554 பேருக்கு என்ன நடந்தது என்பது சிக்கலாகவுள்ளது என ரவி குமுதேஸ் மேலும் தெரிவித்துள்ளார். (ப)

## ஜனாதிபதி, பிரதமருடன் விரைவில் சந்திப்பு

### வாசுதேவ தெரிவிப்பு



கொழும்பு, பெப்.13

நாட்டின் தற்போதைய சூழ்நிலை தொடர்பில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ச ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடுவதற்கு தீர்மானித்துள்ளோம் என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

நேற்று மாலை அமைச்சர் விமல் வீர வன்சவின் இல்லத்தில் சுமார் 3 மணித்தியாலங்கள் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே குறித்த தீர்மானம் எட்டப்பட்டது என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார குறிப்பிட்டுள்ளார். இக் கலந்துரையாடலில் 12 கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டிருந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ந-இ)

# கொரோனாத் தொற்று வீதம் மே மாதமளவில் குறையும்!

## கூறுகிறார் ஹரித அளுத்கே



கொழும்பு, பெப்.13

**இலங்கையில் கொரோனாத் தொற்றின் அளவு எதிர்வரும் மே மாதத்துக்கு பின்னரே குறைவடையும் நிலை உள்ளதென அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மருத்துவர் ஹரித அளுத்கே தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது, இலங்கையில் கொவிட்-19 பரவலுக்கும், சர்வதேச கொவிட்-19 பரவலுக்குமிடையில் மூன்று மாத கால இடைவெளி காணப்படுகின்றது. சர்வதேச ரீதியில் இந்த மாத இறுதியில் தொற்று வீதம் குறைவடையுமென எதிர்பார்க்கப்படுகின்ற போதிலும், இலங்கையில் தொற்றின் அளவு எதிர்வரும் மே மாதத்துக்கு பின்னரே குறைவடையும் நிலை உள்ளது.

எனவே, சர்வதேச ரீதியில் நோயாளர் எண்ணிக்கை குறைவடைவதனால் இலங்கையிலும் அந்த எண்ணிக்கை உடனடியாக குறைவடையுமென எதிர்பார்க்க முடியாது.


தொடர்ந்து இரண்டு நாள்களாக ஆயிரத்தை அண்மிக்கும் அளவிலான தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். மேல் மாகாணம் கொரோனாப் பரவல் கேந்திரமாகவே தொடந்தும் உள்ளமை தெளிவாகத் தெரிகின்றது.

சனத்தொகை அளவில் கணிப்பிடும்போது கடந்த மாதத்தில் ஒரு மில்லியன் மக்களில் 2 ஆயிரத்து 882 பேருக்குத் தொற்று உறுதியானது. எனினும், இரண்டு வாரங்களில் அந்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 221 ஆக அதிகரித்துள்ளது - என்றார். (ற-இ)

---

### கொவிட் இறப்பு விகிதம்

# ஒரு மில்லியனுக்கு 17 ஆக அதிகரிப்பு!



கொழும்பு, பெப்.13

இலங்கையில் கொவிட்19 இறப்பு விகிதம் ஒரு மில்லியன் மக்களுக்கு 17 ஆக அதிகரித்துள்ளது என்றும் கடந்த இரு வாரங்களில் இறப்பு எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்றும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மருத்துவர் ஹரித அளுத்கே நேற்றுத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஒரு மாதத்துக்கு முன் ஒரு மில்லியன் மக்கள் தொகைக்கு 2 ஆயிரத்து 882 நோயாளிகள் இருந்தனர். இது இரு வாரங்களில் இரட்டிப்பாகியுள்ளது. இப்போது இறப்பு எண்ணிக்கை ஒரு மில்லியனுக்கு 17 ஆக அதிகரித்துள்ளது. நோயாளிகள் பதிவாகும் வேகத்தை விட நம் நாட்டில் இறப்பு விகிதம் வேகமாக அதிகரித்து வருகின்றது - என்றார். (ற-இ)

---

# ராஜீவ் காந்தியின் பாதுகாப்பாளர் காலமானார்

கொழும்பு, பெப்.13

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியை கொழும்பில் கடற்படை சிப்பாய் ஒருவர் தாக்க முற்பட்ட சமயத்தில், ராஜீவ் காந்திக்கு பிரதான பாதுகாப்பாளராக இருந்த இலங்கைப் பொலிஸ் அதிகாரி காலமானார். ஓய்வுபெற்ற பிரதிப்பொலிஸ் மா அதிபரான காமிலஸ் அபேகுணவர்தன என்பவரே உயிரிழந்தவராவார்.

ஜூலை 1987 இல் கொழும்பில் படையினரின் அணிவகுப்பை பார்வையிட்டபோது கடற்படைச் சிப்பாய் ஒருவர் ராஜீவ் காந்தியைத் திடீரென தாக்க முற்பட்டவேளை ராஜீவ் காந்திக்கு நெருக்கமான பாதுகாப்பை வழங்கும் தலைமைப் பாதுகாப்பு ஒருங்கிணைப்பு அதிகாரியாக இவர் இருந்தார். இவர் 1980 காலப்பகுதியில் அப்போதைய இலங்கை ஜனாதிபதி ஜே.ஆரின் தனிப்பட்ட பாதுகாப்பு அதிகாரியாகக் கடமையாற்றியவராவார். (வ-இ)

---



# பொருளாதார மத்திய நிலையத்தில் புதிய வர்த்தக கட்டடத் தொகுதி

கொழும்பு, பெப்.13

நாரஹேன்பிட்டி பொருளாதார மத்திய நிலைய வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வர்த்தக கட்டடத் தொகுதி ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் நேற்று முன்தினம் திறக்கப்பட்டது. இலங்கை அரச வர்த்தகக் கூட்டுத்தாபனத்தின் கண்காட்சிகூடம் விரிவுபடுத்தப்பட்டு, ஸ்டேட் ட்ரஸ்ட் சென்டர் (State Trust Center)என்று அழைக்கப்படும் குறித்த வர்த்தக கட்டடத் தொகுதி நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இது 78 அரச மற்றும் தனியார் வர்த்தக நிறுவனங்களைக் கொண்டுள்ளது. அரச தொழில்முயற்சியாளர்களும், சுதேச உற்பத்தியாளர்களும் தரமான தயாரிப்புகள் மற்றும் சேவைகளை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நுகர்வோருக்கு உதவுவதே இத்திட்டத்தின் நோக்கம். சுதேச உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதற்காக அவர்களின் உற்பத்திப் பொருள்களை வர்த்தக நிலையங்களுக்கு வழங்கும் சந்தர்ப்பத்தையும் இது வழங்குகிறது. (வ-இ)

---

# விவசாயிகளுக்கு துப்பாக்கி!!!

## மஹிந்தானந்த தெரிவிப்பு



கொழும்பு, பெப்.13

ஒரு ஏக்கருக்கு அதிகளவில் காணியைக் கொண்டுள்ள விவசாயிகளுக்கு துப்பாக்கி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். பாதுகாப்பு அமைச்சுடன் கலந்துரையாடப்பட்ட பின்னரே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

மேலும், வனங்கள் அழிக்கப்பட்டு விவசாயம் மேற்கொள்ளப்படுவதனால் வனவிலங்குகளுக்கு உணவில்லாத பிரச்சினை ஏற்படுகின்றது. எனவே, வனவிலங்குகள் உணவு தேடி விவசாய நிலங்களுக்குள் பிரவேசிக்கின்றன. இதன் காரணமாக விவசாயத் துறைக்கு 25வீதமான நட்டம் ஏற்படுகின்றது. அதிகமான பாதிப்பு காட்டுயானைகளின் பிரவேசம் காரணமாகவே இடம்பெறுகின்றது என விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார். (ந-இ)

---

# கட்டுநாயக்க பி.சி.ஆர். ஆய்வக ஊழியருக்கு தொற்று உறுதி

## ஆறு பேர் தனிமையில்

கொழும்பு, பெப்.13

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திலுள்ள பி.சி.ஆர். மருத்துவ ஆய்வகத்தில் மாதிரி சோதனை ஊழியர் ஒருவர் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளார். இந்நிலையில், அவருடன் நெருங்கிய தொடர்புகொண்டிருந்த ஏனைய 6 ஊழியர்கள் தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக பி.சி.ஆர். சோதனை முடிவுகளைப் பெற சிறிது தாமதம் ஏற்பட்டுள்ளது என கம்பஹா மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகளின் மாவட்ட பணிப்பாளர் டாக்டர் நலின் அரியரத்ன தெரிவித்துள்ளார். (ந-இ)

---

# குமாரபுர படுகொலையின் 25ஆவது நினைவுதினம்

திருகோணமலை, பெப். 13

திருகோணமலையில் கிளிவெட்டி, குமாரபுரத்தில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் உறவுகளின் 25ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று கடைப்பிடிக்கப்பட்டது.

1996 ஆம் ஆண்டு பெப்ரவரி 11 ஆம் திகதியன்று ஒன்பது பெண்கள் மற்றும் 12 வயதுக்குட்பட்ட ஒன்பது சிறுவர்கள் உள்பட 24பேர் படுகொலை செய்யப்பட்டனர்.


இதனை நினைவுகூரும் வகையில், அப்பகுதி மக்கள் அங்குள்ள கோயிலொன்றில் பொங்கல் பொங்கி வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், இராணுவ அச்சுறுத்தலுக்கு மத்தியில் பூசை வழிபாடு முன்னெடுக்கப்பட்டதுடன், படுகொலை செய்யப்பட்டவர்களது நினைவுத்தூபி அமையப்பெற்ற இடத்தில் உயிரிழந்தவர்களது உறவினர்கள் ஒன்றுகூடி விளக்கேற்றி அஞ்சலி செலுத்தினர். (ய)



# மாகாணப் பாடசாலைகளுடைய மகத்துவம் பேணப்படவேண்டும்!

சுப்பிரமணியம் சிவநேசராசன்,
ஆசிரியர்,
யாழ். அச்சுவேலி மத்திய கல்லூரி.



வடக்கு மாகாண சபையின் நிர்வாகக் கட்டமைப்பில் இயங்குகின்ற சில மாகணாப் பாடசாலைகளை மத்திய அரசாங்கத்தின் நேரடிக் கட்டுப்பாட்டில் உள்ள தேசிய பாடசாலைகளாகத் தரம் உயர்த்தும் அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பாக இன்று வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

### வடக்கு மாகாண சபை

அன்று ஈழத் தமிழர்களின் கண்ணீரைத் துடைப்பதற்காக அப்போதைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி, தமிழ்நாடு முதலமைச்சர் எம்.ஜி.இராமச்சந்திரன் ஆகியோர் கண்ட கனவின் வெளிப்பாடே வடக்கு மாகாணசபையின் தோற்றம் என்று கூறினால் அது மிகையாகாது. ஆகவே எமது பாடசாலைகளை எமது வடக்கு மாகாணசபை நிர்வகிப்பதையே எமது மக்கள் கூடுதலாக விரும்புவார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

ஆனால், எம்மவர் சிலரின் அரசியல் குத்துக்கரணங்கள், அரசியல் பாரபட்சங்கள் மற்றும் சங்கீதக் கதிரைப் போட்டிகள் என்பவை காரணமாக எமது வடக்கு மாகாண சபையின் முழுமையான அனுகூலங்கள் சாதாரண பொதுமக்களைச் சென்றடையவில்லை என்பதை நாம் விரும்பியோ விரும்பாமலோ ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். இதற்கு கல்வித் துறையும் விதிவிலக்கல்ல.

உதாரணமாக அன்று வடமராட்சியில் இருந்து திருநெல்வேலிக்கு பல மைல் தூரம் பயணித்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை திறம்பட வழிப்படுத்திய பேராசிரியர் அழகையா துரைராஜா போன்றவர்களின் கடின உழைப்பை இன்று எமது சமூகத்தில் காண்பது மிகவும் அரிதாகவுள்ளது.

போட்டிமுறைக் கல்வி மேலோங்கி நிற்கின்ற இக்கால கட்டத்தில், எந்தப் பெற்றோரும் தமது பிள்ளைகள் வசதிகள் கூடிய பாடசாலைகளில் படிப்பதையே கூடுதலாக விரும்புவார்கள் என்பது பொதுவழமை. ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சை வெட்டுப்புள்ளி அதிகரிப்பும், நகரத்தை நோக்கிய மாணவர்களின் படையெடுப்பும் இதற்குச் சான்றுகள் ஆகும்.

### கல்வித் துறையில் அரசியல் தலையீடு

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, கொழும்பு றோயல் கல்லூரி, கொழும்பு ஆனந்தாக் கல்லூரி, மருதானை சாஹிரா கல்லூரி போன்ற இலங்கையில் உள்ள பிரபல்யமான பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாகவே இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆகவே சாதாரண வசதிகளுடன் இயங்குகின்ற ஒரு மாகாணப் பாடசாலையானது தேசியப் பாடசாலையாக தரம் உயர்த்தப்படும்போது குறிப்பிட்ட பாடசாலையின் வசதிகள் அதிகரிக்கும் என்பது யதார்த்தமான உண்மையாகும்.

அத்துடன் வடக்கு மாகாணத்தில் ஆயிரக்கணக்கான மாகாணப் பாடசாலைகள் உள்ள நிலையில் கிராமப்புறங்களில் உள்ள சில பாடசாலைகள் மட்டும் தேசிய பாடசாலைகளாகத் தரம் உயர்த்தும் அரசாங்கத்தின் செயற்பாட்டால் கூடுதலான நன்மையடைவது எமது கிராமப்புற மாணவர்களே என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்வார்கள்.

உதாரணமாக யாழ். நகருக்கு வெளியேயுள்ள மானிப்பாய் இந்துக் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, நெல்லியடி மத்திய கல்லூரி போன்ற பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாகத் தரம் உயர்த்தப்பட்ட பின்பு குறிப்பிட்ட பிரதேச மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் ஏற்பட்ட மாற்றத்தை யாழ் கல்விச் சமூகம் நன்கு அறியும்.

அதாவது, 'நெல்லுக்கிறைத்த நீர் வாய்க்கால் வழியோடி புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம்' என்பதுபோல மிகக் குறைந்த வசதிகளுடன் இயங்கும் சில கிராமப்புற பாடசாலைகள், அதிஷ்டவசமாக தேசிய பாடசாலைகளாக தரம் உயர்த்தப்படுவதை விரும்பாத எமது அரசியல்வாதிகளில் பலரும் 'ஊருக்கு உபதேசம் உனக்கில்லையடி மகளே' என்ற நிலையில் பிரபல்யமான தேசியப் பாடசாலைகளிலேயே தமது பிள்ளைகளைப் கல்வி கற்க வைக்கின்றனர் என்பது வெளிச்சத்துக்கு வராத உண்மையாகும்.

இதேபோன்று மாகாண பாடசாலைகள் சிறப்பாக இயங்கினாலும் எமது சமூகம் தேசிய பாடசாலைகளுக்கே கூடிய முக்கியத்துவத்தை வழங்குகின்றது. அத்துடன் மாணவர்கள் இருந்து படிப்பதற்கு போதியளவு கதிரை, மேசைகள் இன்றிய நிலையிலும், சில மாகாணப் பாடசாலைகள் மிகுந்த வசதிக் குறைவுகளுடன் இயங்கிக் கொண்டிருக்கின்றன என்ற உண்மையையும் நாம் மறந்துவிட முடியாது.

ஆகவே தேசிய பாடசாலைகளுக்கு நிகராக எமது மாகாணப் பாடசாலைகளின் வசதிகள் அதிகரிக்கப்பட வேண்டியது காலத்தின் தேவையாகும். அப்போது தான் தேசியப் பாடசாலைகளுக்கு நிகரான கல்வி வளர்ச்சியையும் மாணவர்களின் பெறுபேறுகளையும் மாகாணப் பாடசாலைகளிலும் எதிர்பார்க்கலாம்.

எம்மவர் சிலரின் அரசியல் குத்துக்கரணங்கள், அரசியல் பாரபட்சங்கள் மற்றும் சங்கீதக் கதிரைப் போட்டிகள் என்பன காரணமாக எமது வடக்கு மாகாண சபையின் முழுமையான அனுகூலங்கள் சாதாரண பொதுமக்களைச் சென்றடையவில்லை என்பதை நாம் விரும்பியோ விரும்பாமலோ ஏற்றுக்கொள்ளத் தான் வேண்டும். இதற்கு கல்வித் துறையும் விதிவிலக்கல்ல.

## இன்றைய நாள்

**மேடம்:** ஊக்கமும், உற்சாகமும் குடிகொள்வதால் முயற்சி வெல்லும்.புதிய பாதை புலப்படும். எடுத்த முயற்சி வெற்றி பெறும். மற்றவர் கருத்தை ஏற்றுக்கொள்வதில் தவறில்லை.

**இடபம்:** வெளிநாட்டிலிருந்து ஒரு மகிழ்ச்சியான செய்தி தேடி வரும்.நண்பரின் ஒத்துழைப்பால் சுவாரஸ்யமான நாளாக அமையும்.யார் விரும்பினாலும் நியாயமாக எதனையும் செய்வீர்கள்.

**மிதுனம்:** எண்ணம் நிறைவேற நேர்மையான முயற்சி செய்வீர்கள். உண்மையின் பக்கம் நிற்பது நல்லது என்று உணர்வீர்கள்.ஒவ்வாத உணவுகளை உட்கொள்வதைத் தவிர்க்க வேண்டும்.

**கடகம்:** மனதில் நினைப்பதை எல்லாம் வெளியிட வேண்டாம்.இங்கிதமாக நடந்து கொள்வது நல்லது. அவசர சண்டை வேண்டாம். உங்கள் உயர்வை வெளிப்படுத்தும் செயல் ஒன்றைச் செய்வீர்கள்.

**சிம்மம்:** பழைய நண்பர்களின் புதிய தொடர்பால் பரவசம் அடைவீர்கள். தேவையற்ற விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்க்கவும். தடைகள் அகலும். உற்றவர்கள் நலனில் அக்கறை கொள்வீர்கள்.

**கன்னி:** வீடு, இடம் வாங்க எடுத்த முயற்சி வெற்றி தரும். பயம் தீரும். பாராட்டுக் கிடைக்கும் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். நேற்று ஏற்பட்டிருந்த வருத்தங்கள், கவலைகள் தீரும்.

**துலாம்:** எது சரி எது தவறு என்பதை உற்றவர் எடுத்துச் சொல்வர்.உணவுக் கட்டுப்பாடு அவசியம். நல்லவர் என்று நம்ப முன் யோசியுங்கள். கடுமையான விவாதங்கள் நன்மை தராது என்று உணர்வீர்கள்.

**விருச்சிகம்** மதியத்துக்கு மேல் நல்ல செய்தி ஒன்று வந்து மகிழ்ச்சி தரும்.நல்ல செய்தி கிடைக்கும். விரோதிகள் விலகுவதால் நிம்மதி வரும்.மகிழ்ச்சி கூடும். திட்டமிட்ட விடயத்தில் மாற்றம் செய்வீர்கள்.

**தனுசு:** உற்சாகமான விடயங்கள் நடைபெற்று மனமகிழ்ச்சி அளிக்கும்.மற்றவர்களிடம் பணிந்து பேசி நன்மைகளைப் பெறு வீர்கள். கோபத்தைவிட அன்பு நன்மை செய்யும் என்பதை உணர்வீர்கள்.

**மகரம்:** விலை உயர்ந்த பொருள்னளை வாங்கி மகிழ்வீர்கள். மாற்றம் பற்றிச் சிந்திக்க வேண்டிய தேவை வரும்.எடுத்த விடயத்தில் எளிதில் வெற்றி கிடைக்கும்.

**கும்பம்:** குடும்ப ஒற்றுமைக்கு எடுத்த முயற்சி வெற்றி பெறும். நண்பர்கள், உறவினரிடையே பேசி அவர்களைச் சேர்த்து வைப்பீர்கள். உரியவர்களிடம் மனம் திறந்து பேசி வியப்பூட்டுவீர்கள்.

**மீனம்:** : முயற்சி ஒன்றில் வெல்ல நண்பர்களின் ஆதரவு கிடைக்கும். மறைமுக போட்டிகளை, முனைப்புடன் முறியடிப்பீர்கள். முன்பைவிட வருமானமும், இலாபமும் அதிகரிப்பதால் மகிழ்வீர்கள்.

# உள்ளூராட்சி அலுவலர்கள் எவரது அறிவுறுத்தல்களைப் பின்பற்றுவது?

## *சாவகச்சேரி நகர சபையில் சர்ச்சை*

**யாழ்ப்பாணம், பெப். 13**
**உள்ளூராட்சிச் சபைகளில் பணியாற்றும் அலுவலர்கள் தங்கள் உயர் அதிகாரிகளின் அறிவுறுத்தலுக்கு அமைவாகப் பணியாற்றுவதா? அல்லது சபை உறுப்பினர்களின் அறிவுறுத்தலுக்கு அமைவாகப் பணியாற்றுவதா? என்ற சர்ச்சை சாவகச்சேரி நகர சபையில் எழுந்துள்ளது.**

சாவகச்சேரி நகர சபையின் மாதாந்த அமர்வு நேற்றுமுன் தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

இதன்போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் சுப்பிரமணியம் நிதிகேஷன், தமது அறிவுறுத்தல்களைச் செவிமடுக்க மறுக்கும் பொதுச் சுகாதாரப் பரிசோதகரை இடமாற்றவேண்டும் என்று கோரிக்கை முன்வைத்தார்.

நகரசபை குடியிருப்பாளர்களின் தரம் பிரிக்காத வீட்டுக் கழிவுகளை அகற்றுவதற்கு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மறுப்புத் தெரிவிக்கின்றார் என்ற காரணத்தை முன்வைத்தே மேற்படி கோரிக்கையை முன்வைத்தார்.

சாவகச்சேரி நகர சபைக்குகளப் பயணம் மேற்கொண்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் நகர சபையின் கழிவகற்றல் தொடர்பில் ஆராய்ந்தார்.

குடியிருப்பாளர்களின் கழிவுகளை அகற்றும் போது தரம் பிரித்துச் சேகரிக்குமாறு அறிவுறுத்தியிருந்தார். உக்காத கழிவுகள் உக்கும் கழிவுகள் என்று தரம் பிரித்து, கழிவு சேகரிக்கும் வாகனங்களில் ஏற்றுமாறு நகர சபைக் குடியிருப்பாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டு அதனடிப்படையிலேயே கழிவுகள் அகற்றப்படுகின்றன. தரம் பிரிக்காத கழிவுகள் பொதுச் சுகாதார பரிசோதகரின் அறிவுறுத்தலுக்கு அமைவாக அகற்றப்படுவதில்லை.

இதனாலேயே பொதுச் சுகாதாரப் பரிசோதகரை மாற்ற வேண்டும் என்று குறித்த உறுப்பினர் தெரிவித்திருந்தார்.

இவ்வாறான தீர்மானத்தை சபையில் கொண்டுவர முடியாதென்றும் உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் அறிவித்தலுக்கு அமைவாகவே கழிவகற்றல் நடைமுறை கையாளப்படுகின்றது எனவும் சபையின் செயலர் விளக்கமளித்தார்.

இதேவேளை, நகரைச் சுத்தமாக வைத்திருக்கும் திட்டத்தில் உக்கக்கூடிய மற்றும் உக்காத கழிவுகளை தரம்பிரித்து வைக்குமாறும், அவ்வாறு தரம் பிரித்து வைக்காத குப்பைகளை குடியிருப்பாளர் கள் தரம் பிரித்து வைக்க ஒரு மாத கால அவகாசம் வழங்க வேண்டுமெனவும் இது தொடர்பான அறிவித்தலை தனது செலவில் அச்சிட்டுத் தருகிறேன் எனவும் இந்த உறுப்பினர் பொறுப்பெடுத்து மூன்று மாதங்களுக்கு முன்னர் அது தொடர்பான சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஒ.9)

## வரணி குருநாதர் கோவிலில் சிறப்பு சொற்பொழிவு

கொடிகாமம், பெப்.13
தென்மராட்சி, வரணி மாசேரி திருவருள்மிகு புராதன குருநாதர் கோவில் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு "சிவனடியார்களை சிந்திப்போம்; வணக்குவோம்" எனும் விடயப்பொருளில் சிறப்புச் சொற்பொழிவு நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வு எதிர்வரும் 17 ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை வரை ஆலயத்தின் பிரதான மண்டபத்தில் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் மாலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது. நிகழ்வில் பெரிய புராண சிறப்புச் சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும்.

பக்தர்கள் அனைவரையும் இச் சொற்பொழிவில் கலந்துகொள்ளுமாறு ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (ந)

## இணக்க சபை அமர்வு புதிய இடத்தில்

யாழ்ப்பாணம், பெப்.13
ஜே/246 யாழ்ப்பாணம் இணக்க சபை அமர்வுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் யா/ சன்மார்க்க மகா வித்தியாலயத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இணக்க சபை அமர்வுகள் நாவாந்துறை சென் நீக்கிலஸ் சனசமூக நிலையத்தில் நடைபெற்று வந்த நிலையில் தற்போது புதிய இடத்துக்கு மாற்றப்பட்டுள்ளது என்று சபைத் தவிசாளர் ம. மேர்சி சுஜந்தினி தெரிவித்துள்ளார். (ஐ)

## அங்குரார்ப்பண பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.13
யாழ்ப்பாணம் கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலையின் பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பண பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு பாடசாலையில் நடைபெறவுள்ளது.

எனவே பாடசாலையின் அனைத்து பழைய மாணவர்களையும் அங்குரார்ப்பணப் பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அதிபர் த.மனோகரன் கேட்டுக்கொண்டுள்ளார். (ஐ)





# மீண்டும் ஆரம்பமானது வெற்றிமனை இல்லம்

கிளிநொச்சி மலையாளபுரம் கிராமத்தில் கிளிநொச்சி விசேட தேவைக்குட்பட்டோர் வலையமைப்பால் வெற்றிமனை இல்லம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மனநலம் பாதிக்கப்பட்டுள்ள பெண்கள் பராமரிக்கப்படுகின்ற இல்லமாக 2009 ஆம் ஆண்டுக்கு இயங்கிய வெற்றிமனை இல்லம், தற்போது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மனநலம் பாதிக்கப்பட்டு, கைவிடப்பட்டுகின்ற அல்லது வீடுகளில் முறையாகப் பராமரிக்க முடியாத சூழ் நிலை காரணமாக பாதிக்கப்பட்ட பெண்களை 2009ஆம் ஆண்டுக்கு முன் வெற்றிமனை இல்லம் பராமரித்து வந்தது. தற்போது கிளிநொச்சி விசேட தேவைக்குட்பட்டோர் வலையமைப்பால் வெற்றிமனை இல்லம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கடந்த வாரம் இடம்பெற்ற இல்லத் திறப்பு நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட உளநல மருத்துவர் மா. ஜெயராசா, முல்லைத்தீவு சிறுவர் நன்நடத்தை உத்தியோகத்தர் ம. முத்துக்குமார், கரைச்சி சிறுவர் நன்நடத்தை உத்தியோகத்தர் த. பரமேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டு இல்லத்தை திறந்து வைத்துள்ளனர். (ப-214)

## தனித்து விடப்பட்ட மூதாட்டி வைத்தியசாலையில் சேர்ப்பு

காரைநகர், பெப்.13
காரைநகர் பிரதான வீதியில் தனித்து விடப்பட்ட மூதாட்டி ஒருவர் மீட்கப்பட்டு காரைநகர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை நீண்ட நேரமாக காரைநகர் கிழக்கு பிரதான வீதியில் தனித்து அமர்ந்திருந்த மூதாட்டியிடம் விசாரித்தபோது அவர் தனது பெயரையோ ஊரையோ கூறாது அமர்ந்திருந்த நிலையில், அதுகுறித்து அப்பகுதி கிராம சேவையாளருக்கு பொதுமக்களால் அறிவிக்கப்பட்டது.

அவ்விடத்துக்குச் சென்ற கிராம சேவையாளர் அந்த மூதாட்டியிடம் விசாரித்தபோது அவர் அனைத்து விடயங்களையும் மறந்து சுய நினைவு அற்றநிலையில் உடல் நலம் சரியில்லாது இருப்பதை அவதானித்து அவரைக் காரைநகர் வைத்தியசாலையில் சேர்த்துள்ளார். அவர் தொடர்பான விபரம் தெரிந்தவர்கள் உடனடியாகத் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-250)



## இருவேறு குற்றச்சாட்டுக்கள்: பளையில் நால்வர் கைது

பளை, பெப்.13
பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இருவேறு குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பளை பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், அனுமதிப்பத்திரத்துக்கு முரணான வகையில் மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். குற்றச்சாட்டின்கீழ் இரண்டு டிப்பர்களுடன் அவற்றின் சாரதிகள் இருவர் மற்றும் உழவு இயந்திரம் ஒன்றுடன் சாரதி ஒருவர் ஆகியோரே கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, பளைப் பகுதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய ஒருவரை பொலிஸ் புனலாய்வுப் பிரிவினர் சோதனையிட்ட போது, அவரிடம் 10 கிராம் ஹெரோய்ன் உடமையில் இருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதான நால்வரையும் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என பளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (ந-113)

# உரிய நேர அட்டவணை இல்லையேல் பகிஷ்கரிப்பு

## பருத்தித்துறைச்சாலை ஊழியர்கள் அறிவிப்பு

**யாழ்ப்பாணம், பெப். 13**

**உயிர் அச்சுறுத்தலின்றி கடமையாற்றுவதற்கு ஒழுங்கான நேர அட்டவணையைத் தயார் செய்து வழங்காவிட்டால் எதிர்வரும் 24ஆம் திகதியிலிருந்து தொடர் பகிஷ்கரிப்புப் போராட்டத்தை முன்னெடுப்போம் என்று அனைத்துப் பேருந்துக் குழுவினர் சார்பாக இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறைச்சாலை ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.**

இது தொடர்பில் அவர்கள் கையெழுத்திட்டு அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சரியான நேர அட்டவணை ஒழுங்குபடுத்தப்படவில்லை. இதனால் தனியார் போக்குவரத்துச் சேவையினர் தினமும் எம்முடன் முரண்படுகின்றனர். பொலிஸ் நிலையத்துக்கு அடிக்கடி செல்லவேண்டியுள்ளது.

கடந்த 3ஆம் திகதி எமது சாரதி ஒருவர் தாக்கப்பட்டுள்ளார். அவர் மருத்துவமனையில் சிகிச்சை பெறவேண்டிய நிலைமை ஏற்பட்டது. தனியார் பேருந்துக் குழுவினரே இதனை மேற்கொண்டிருக்கவேண்டும்.

இவ்வாறு உயிர் அச்சுறுத்தலுக்கு மத்தியில் பணியாற்றவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனைத் தவிர்த்து நாம் சுதந்திரமாக பணியாற்றுவதற்குரிய வகையில் ஒழுங்கான நேர அட்டவணையைத் தயார் செய்து தருமாறு கோருகின்றோம்.

அவ்வாறு வழங்காவிடின் எதிர்வரும் 24ஆம் திகதியிலிருந்து தொடர் பகிஷ்கரிப்பை மேற்கொள்ளவேண்டிவரும், என்று அந்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.இ)

# சிறுதானிய செய்கையில் விவசாயிகள் ஆர்வம்

சாவகச்சேரி,பெப்.13

தென்மராட்சி தெற்கு தனங்களப்பு மற்றும் மறவன்புலவு ஆகிய பிரதேசங்களில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட வயல்களில், சிறுதானியப் பயிர்கள் பயிரிட விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

மழைவெள்ளம் நிறைந்திருந்த வயல்களில் நீர்மட்டம் குறைவடைந்து காணப்படுவதால், சிறுதானியப் பயிர்களைப் பயிரிட்டால் சிறந்த விளைச்சலைப் பெறமுடியும் என்று விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். சிறுதானியப் பயிர்களை கால்நடைகளிடமிருந்து பாதுகாக்க வேலி அமைத்து வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

முட்கம்பிகள் வழங்கும் பட்சத்தில் மக்கள் பங்களிப்புடன் வேலிகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கமக்கார அமைப்புகள் தெரிவித்துள்ளன. இதற்காக விவசாயிகள் பிரதேச செயலகத்தை நாடியுள்ளனர்.

இது தொடர்பாக பிரதேச செயலகத்தினருடன் தொடர்புகொண்டு கேட்டபோது, பாதுகாப்பு வேலி அமைப்பது தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். என்றனர். (க-9)

## அதிரடிப்படையால் துப்பாக்கிகள், ரவைகள் மீட்பு

கொழும்பு, பெப். 13

கட்டான மிரிஸ்வத்த பகுதியில் சுற்றிவளைப்பின்போது சட்டவிரோதமாக இயங்கி வந்த ஆயுதக் களஞ்சியசாலை பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் முற்றுகையிடப்பட்டது.

இதன்போது, 08 துப்பாக்கிகள் மற்றும் ஆயிரத்து 117 ரவைகள் மீட்கப்பட்டுள்ளதுடன், ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் அதிரடிப்படை தெரிவித்துள்ளது. (ய-இ)




# மணி விழா நிகழ்வு

சாவகச்சேரி, பெப்.13

மிருசுவில் விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயத்தில் விஞ்ஞான பாட ஆசிரியராகக் கடமையாற்றி இளைப்பாறிச் சென்ற பிரம்மஸ்ரீ தி. கிருஷ்ணமூர்த்தி குருக்களின் மணி விழா நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்று. அதிபர் இ.நாகேந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தென்மராட்சி கல்வி வலயத்தின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (ப-9)

# பாடசாலைகளுக்கு கொவிட் விழிப்புணர்வு செயற்றிட்டம்



பருத்தித்துறை, பெப்.13

கொவிட்19 தடுப்பு மருந்து ஏற்றலை ஊக்குவிப்பதற்கு கிராமங்கள் மற்றும் பாடசாலைகள் தோறும் விழிப்புணர்வுச் செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட கிராமங்கள், பாடசாலைகள் தோறும் சுகாதார மருத்துவ அதிகாரி மற்றும் பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர் இணைந்து இவ் விழிப்புணர்வுச் செயற்றிட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

மார்ச் மாதம் முதல்வாரத்திலிருந்து அறுபது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும், தொடர்ந்து முப்பது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் கொவிட்19 தடுப்பூசி சமூகமட்டத்தில் வழங்கப்படவுள்ளது.

எனவே இதுகுறித்த சந்தேகங்களை பொதுமக்களிடமிருந்து நீக்கி சரியான தெளிவுபடுத்தல்களை மக்களுக்கு வழங்கி தடுப்பூசி ஏற்றலை வெற்றிகரமாக்குவதன் மூலம் சமூகத்தை கொவிட் தொற்றிலிருந்து பாதுகாப்பதே இதன்நோக்கமாகும்.

இதற்காக பாடசாலை மாணவர்களூடாக பெற்றோருக்கான தெளிவுபடுத்தல்களையும், ஆசிரியர்களுக்கு அறிவூட்டலையும் வழங்குவதோடு சமூகமட்டத்தில் கிராமசேவகர் பிரிவு ரீதியாகவும், விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. (ற-9).

# பொதுக்கூட்டமும் நிர்வாகத்தினர் தெரிவும்

சாவகச்சேரி, பெப்.13

சாவகச்சேரி ஆதார மருத்துமனை நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவும் இம் மாத இறுதியில் நடைபெற உள்ளது. நிர்வாகிகள் தெரிவில் சங்க அங்கத்தவர்கள் மட்டும் பங்குபற்ற முடியும் என்பதால் அங்கத்தவர்களாக இணைய விரும்புவோர் சங்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. (வ-9)

# பாகிஸ்தான் பிரதமரையும் அரசு ஏமாற்றிவிட்டது

## எம்.பி நிரோஷன் பெரேரா சாடல்

கொழும்பு, பெப்.13

இலங்கையில் வாழும் முஸ்லிம் மக்களை மட்டுமல்ல பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானையும் இந்த அரசாங்கம் ஏமாற்றிவிட்டது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நிரோஷன் பெரேரா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களை அடக்கம் செய்வதற்கு அனுமதி வழங்கப்படும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ச நாடாளுமன்றத்தில் அறிவித்தார். ஆனால், இது விடயத்தில் நிபுணர் குழுவே முடிவெடுக்கும் எனவும், அந்த முடிவுக்காக காத்திருக்கிறோம் எனவும் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி குறிப்பிடுகின்றார். எனவே, இது விடயத்தில் அரசின் உண்மையான நிலைப்பாடு என்ன?

பிரதமரின் அறிவிப்புக்கு பாகிஸ்தான் பிரதமர், அமெரிக்கத் தூதுவர், பிரிட்டன் தூதுவர் ஆகியோர் வரவேற்புத் தெரிவித்தனர். இந்நிலையில் முஸ்லிம் மக்களை மட்டுமல்ல பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானையும் அரசு ஏமாற்றியுள்ளது. வர்த்தமானி அறிவித்தல்களை வெளியிட்டு அதை மீளப்பெறுவது போலவே இது விடயத்திலும் முன்னோக்கி செல்வதுபோல் காண்பித்து அரசு பின்நோக்கி நகர்கின்றது என்றார். (வ-44)

# ரயில் அதிபர்களின் போராட்டம் முடிவு

கொழும்பு,பெப்.13

ரயில் நிலைய அதிபர் சங்கம் முன்வைத்த கோரிக்கைகளுக்கு, விரைவில் தீர்வு பெற்றுத் தரப்படும் என்று போக்குவரத்து அமைச்சர் வழங்கிய வாக்குறுதியைத் தொடர்ந்து, போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.

கனிஷ்ட சேவை ஊழியர்களுக்கான சேவை வெற்றிடம் தொடர்பில் போக்குவரத்து அமைச்சர், ரயில் திணைக்களத்திடம் எதிர்வரும் செவ்வாய்கிழமைக்குள் அறிக்கை கோரியுள்ளார் என்று ரயில் நிலைய அதிபர் சங்கத்தின் பிரதான செயலாளர் கசுன் சாமர தெரிவித்தார்.

ரயில் சேவையில் நிலவும் பதவி வெற்றிடங்களுக்கு சேவையாளர்களை இணைத்துக் கொள்ள வேண்டும். இல்லாவிடின் மட்டுப்படுத்தப்பட்ட வகையில் சேவையில் ஈடுபடுவோம் என்று அறிவித்து சட்டப்படி வேலையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை முதல் ஈடுபட்டோம்.

48 மணித்தியாலத்துக்குள் தீர்வை வழங்காவிடின் தொடர் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுப்படுவோம் எனவும் அறிவித்திருந்தோம். இதனையடுத்து போக்குவரத்து அமைச்சில் பேச்சு இடம் பெற்றது.

கோரிக்கைகளுக்கு விரைவில் தீர்வு வழங்கப்படும் என்று போக்குவரத்து அமைச்சர் வாக்குறுதி அளித்தார். தொடர்ந்து தொழிற்சங்க நடவடிக்கையைக் கைவிட்டுள்ளோம். வழங்கிய வாக்குறுதிக்கு அமையச் செயற்படாவிடின் மாற்று நடவடிக்கைக்களை முன்னெடுப்போம் என்றும் அவர் குறிப்பிட்டார். (க-இ)

# குருந்தூர்மலை தமிழர்களுடையதே: தாராலிங்க வெளிப்பாடே சாட்சி

## கூறுகிறார் ரவிகரன்



**முல்லைத்தீவு, பெப்.13**

**முல்லைத்தீவு தண்ணிமுறிப்பு, குருந்தூர்மலையில் அகழ்வாராய்ச்சியில் வெளிப்பட்டிருக்கும் லிங்கமானது, எண்முக தாராலிங்கம் என ஆய்வாளர்கள் பலரும் தெரிவிக்கின்றனர்.**

அந்தவகையிலே ஆய்வாளர்களுடைய கருத்துக்களின்படி, குருந்தூர் மலை தமிழர்களுடையது என்பது வெளிப்படையாகின்றது.

இவ்வாறு முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

தண்ணிமுறிப்பு குருந்தூர் மலையில் இருந்த தமிழர்களுடைய வழிபாட்டு அடையாளங்களும் காணாமல் ஆக்கப்பட்டிருந்தன.

குறிப்பாக எமது மக்கள் குருந்தூர் மலையிலே இறுதியாக கடந்த வருடம் ஐப்பசி மாதம் மேற்கொண்ட பொங்கல் வழிபாடுகளின் போது அங்கு தமிழர்களுடைய வழிபாட்டு அடையாளங்கள் இருந்தன.

இவ்வாறிருக்க அங்கு இடம்பெறும் அகழ்வாராய்ச்சிகளில் எமது மத அடையாளமாக எண் முகத்தாராலிங்கம் வெளிப்பட்டிருக்கின்றது.

குறிப்பாக குமுழமுனை, தண்ணிமுறிப்பு, ஆறுமுகத்தான் குளம் போன்ற இடங்களிலுள்ள வயோதிபர்களுடன் பேசியதில், இந்த குருந்தூர்மலையானது எமது வழிபாட்டு இடங்களைக்கொண்டதெனவும், அகழ்வாராய்ச்சிகள் மேற்கொள்ளும்போது நிச்சயமாக எமது வழிபாட்டு அடையாளங்கள் வெளிப்படும் எனவும் தெரிவித்திருந்தனர்.

அத்தோடு அவ்வாறு அகழ்வாராய்ச்சியில் வெளிப்படும் எமது அடையாளங்களைத் தொல்லியல் திணைக்களத்தினர் மறைப்பதற்கு முற்படுவார்கள். எனவே இந்த அகழ்வாராய்ச்சியில் தமிழர்களும் இணைத்துக்கொள்ளப்படவேண்டும் எனவும் தெரிவித்தனர்.

இருப்பினும் குருந்தூர்மலையில் பூர்வீகமாக இருந்து வரும் எமது வழிபாட்டு அடையாளங்களை மூடி மறைப்பவர்களாகவே தொல்பொருள் திணைக்களத்தி னர் காணப்படுகின்றனர் -என்றார். (ற-246)

---

தமிழர் தாயக பிரதேச

# தொல்பொருள் ஆய்வுகளில் சர்வதேச ஆய்வாளர்கள்

## பச்சிலைப்பள்ளி பிரதேச சபையில் தீர்மானம்

கிளிநொச்சி, பெப்.13

தமிழர் தாயக பிரதேசங்களில் தொல்பொருள் ஆய்வுகளின்போது சர்வதேச ஆய்வாளர்களையும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தொல்லியல் பீட பேராசிரியர்கள் மற்றும் மாணவர்களையும் இணைத்துக் கொள்வதுடன் ஐக்கிய நாடுகள் மரபுரிமை அமையத்தின் மேற்பார்வையும் வேண்டும் என பச்சிலைப்பள்ளி பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. சபையின் மாதாந்த பொதுச்சபை அமர்வு தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் தலைமையில் சபா மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதன் போது பிரேரணையைச் சமர்ப்பித்து தவிசாளர் ஆற்றிய உரையில்,

தமிழர் தாயகப் பிரதேசங்களில் தொல்பொருள் ஆய்வு செய்யும் போது எமது அடையாளங்கள் ஆய்வாளர்களாலேயே திட்டமிட்டு மாற்றப்படுகின்றன என மக்கள் அச்சப்படுகின்றனர். அண்மையில் குருந்தூர் மலையில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வின்போது மேலெழுந்த பல்லவர்காலத் தாராலிங்கத்தைக் கூட பௌத்த மத அடையாளமாகத் தொல்பொருள் திணைக்களம் சித்தரிக்கின்றது. இதனால் மக்கள் குறித்த திணைக்களம் மேல் நம்பிக்கை அற்றுள்ளனர். மக்களிடம் நம்பிக்கையை உருவாக்க வேண்டுமானால் ஒரு மேற்பார்வையின் கீழ் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றார். இதனை சபையினர் ஏகமனதாக ஏற்றுகொண்டதையடுத்து குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (வ-6)

---

# மல்லாவியில் மூவருக்கு தொற்று பல குடும்பங்களுக்குத் தனிமை

கிளிநொச்சி, பெப்.13

கிளிநொச்சியில் உள்ள ஆடைத்தொழில்சாலையில் பணியாற்றும் மல்லாவிப் பிரதேசத்தைச் சேர்ந்த மூன்று பெண்களுக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து அவர்களுடன் தொடர்புடைய 50க்கு மேற்பட்ட குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. அந்த ஆடைத் தொழிற்சாலையில் மல்லாவிப் பிரதேசத்தின் அனிஞ்சயன்குளம், பாண்டியன்குளம் மற்றும் ஒட்டங்குளம் ஆகிய பகுதிகளில் இருந்து பல பெண்கள் பணியாற்றுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-19)

---

# மாணவர்கள் கௌரவிப்பு

முல்லைத்தீவு, பெப்.13

2020 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில், 100 புள்ளிகளைப் பெற்று சித்தி பெற்றமைக்கான கௌரவிப்பு நிகழ்வு கடந்த புதன்கிழமை முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்தப் பாடசாலை, 2020 ஆம் ஆண்டு நடைபெற்ற இப்பரீட்சையில் ஒட்டுசுட்டான் கோட்டத்தில் சித்தி வீதத்தில் முன்னணிப் பாடசாலையாக திகழ்கின்றது.

இந்த நிகழ்வில் துணுக்காய் கல்வி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.ஜெயப்பிரகாஷ், வவுனியா வடக்கு ஓய்வுபெற்ற கணித உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.சிவபாலகுரு, ஒட்டுசுட்டான் பிரதேச பொதுச் சுகாதார உத்தியோகத்தர் எஸ். கோகுலன், பழைய மாணவர்களின் பெற்றோர்கள், அயற்பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள் மற்றும் கிராம சேவை உத்தியோகத்தர், சனசமூக நிலையத் தலைவர், நலன் விரும்பிகள் மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ற-222)

---





# சர்வமத வேலைத்திட்டம் முல்லைத்தீவில் ஆரம்பம்

முல்லைத்தீவு, பெப்.13

கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் கடந்த நான்கு வருடங்களாக நடைமுறைப்படுத்தப்பட்ட 12 மாத விளக்கு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சர்வமத வேலைத்திட்டம் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

இதன் முதற்கட்டமாக முல்லைத்தீவு செல்வபுரம் யூதாததேயு தேவாலயத்தில் முல்லைத்தீவு பங்குத்தந்தை வண. ஏ.ஒகஸ்ரினின் தலைமையில் ஆசீர்வாத பூஜையுடன் ஏனைய மதத் தலைவர்களது ஆசீர்வாத உரை இடம் பெற்றதைத் தொடர்ந்து ஆலய வளாகத்தில் மர நடுகை இடம்பெற்றது.

பல்லினசமய சமூகக் கட்டமைப்பைக் கொண்டுள்ள முல்லைத்தீவு மாவட்டத்தில் மத ஒற்றுமை, சகவாழ்வு என்பவற்றை வலியுறுத்தும் கருத்துரைகளும் இதன்போது இடம்பெற்றன. நிகழ்வில் உதவி மாவட்டச் செயலாளர் லி.கேகிதா, மதத் தலைவர்கள், கலாசார அலுவல்கள் பிரிவின் இணைப்பாளர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் ஆகியோர் எனப் பலர் கலந்து கொண்டனர். (ɾ-19)

---

# தனியாரின் காணி ஆக்கிரமிப்பை எதிர்த்து பச்சிலைப்பள்ளியில் நேற்றுக் கவனவீர்ப்பு!




கிளிநொச்சி, பெப். 13

கிளிநொச்சி - பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் தனி நபர் ஒருவர் மேற்கொள்ளும் காணி ஆக்கிரமிப்பை எதிர்த்து அந்தப் பகுதியில் உள்ள பொது அமைப்புகளால் நேற்றுப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

மீள்குடியேற்றத்தின் பின்னர் குறித்த கிராமத்தில் பால் உற்பத்தி நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அதற்கு அருகில் உள்ள காணியே இவ்வாறு சர்ச்சைக்கு உரியதாக மாறியுள்ளது. அந்தக் காணியை சந்தை மற்றும் கூட்டுறவுச்சங்கம் என்பவற்றை அமைக்க ஒதுக்கியுள்ளோம் என்று சமூக அமைப்புகள் தெரிவிக்கின்றன. ஆனால் அங்கு வீடமைத்துவரும் குறித்த நபர் 'தனது தாயார் குறித்த காணியில் 2009ஆம் ஆண்டுகளில் வசித்தார்' என்று குறிப்பிடுகின்றார். இதையடுத்தே அந்தக் காணியை அபகரிக்கக்கூடாது என்று வலியுறுத்தி மேற்படி அமைப்புகள் நேற்றுப் போராட்டம் நடத்தின. எதிர்வரும் திங்கட்கிழமை வழக்குத் தொடரவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சமூக அமைப்புகள் தீர்மானித்துள்ளன. (ம-6,214)

# பெரமுன அரசை உடைக்கும் சதி முயற்சி வெற்றியளிக்காது!

வாசுதேவ நம்பிக்கை



**கொழும்பு, பெப்.13**

**ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரச கூட்டை உடைக்கச் சிலர் சதி முயற்சிகளை எடுத்து வருகின்றனர். இந்தத் திட்டங்கள் ஒரு போதும் வெற்றியளிக்கமாட்டாது.**

இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களில் ஒருவரான அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, இது ஜனநாயக நாடு. பேச்சு சுதந்திரம் அனைவருக்கும் பொதுவாக்கப்பட்டுள்ளது. ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்குள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு ஒரு உயரிய பதவி வழங்கப்பட வேண்டும் என்று கூறிய கருத்து, பிரதமர் மஹிந்த ராஜபக்சவை தலைவர் பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்று திரிபுபடுத்தப்பட்டுள்ளது.

இதைச் சிலர் பெரிதுபடுத்தி கூட்டணிக்குள் முரண்பாட்டை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர். ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரசைத் தோற்றுவிக்க முன்னின்று செயற்பட்டவர்களை விமர்சிப்பதற்கு இடமளிக்க முடியாது. ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான கூட்டணிக்குள் பல கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புக்கள் அங்கம் வகிக்கின்றன. அனைவரது கருத்துக்கும் யோசனைக்கும் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். கூட்டணி என்ற நிலையில் மாறுபட்ட பல கருத்துக்கள் காணப்படலாம். ஆகவே, கூட்டணியைப் பலவீனப்படுத்த ஒருபோதும் இடமளிக்க முடியாது - என்றார். (ந-22)



## கடலுணவுத் தொழிற்சாலை பிரதமரால் திறந்துவைப்பு!

புத்தளம், பெப்.13

புத்தளம் ஆராச்சிக்கட்டுவ பிரதேசத்தில் நிறுவப்பட்டுள்ள லங்கா கடலுணவு தொழிற்சாலை பிரதமர் மஹிந்த ராஜபக்சவால் நேற்றுமுன்தினம் திறக்கப்பட்டது.

சர்வதேச சந்தையை இலக்காகக் கொண்டு மீன் ஏற்றுமதியில் ஈடுபடும் லங்கா கடலுணவு நிறுவனம் சுமார் 600 வேலைவாய்ப்புகளை உருவாக்கியுள்ளது.

ஏற்றுமதி தரத்திலான லங்கா கடலுணவுத் தயாரிப்புக்களை எதிர்காலத்தில் உள்ளூர் நுகர்வோருக்காக நாடு முழுவதிலுமுள்ள சந்தை வலையமைப்பின் ஊடாக பெற்றுக்கொள்ள முடியும்.

லங்கா கடலுணவு நிறுவனத்தின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து நிறுவனத் தலைவர் சரத் கித்சிறி இதன்போது பிரதமருக்கு விளக்கமளித்தார்.

இந்த நிகழ்வில் இராஜாங்க அமைச்சர்களான சனத் நிசாந்த, லொஹான் ரத்வத்தே, நாடாளுமன்ற உறுப்பினர்களான சிந்தக மாயாதுன்னே, அசோக பிரியந்த மற்றும் லங்கா கடலுணவு நிறுவனத்தின் ஊழியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ந-இ)

## விசாரணை அறிக்கைகள் தாமதம் எதிர்க்கட்சிகள் சபையில் எதிர்ப்பு

கொழும்பு.பெப்.13

ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல்கள் மற்றும் அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுக்களின் விசாரணை அறிக்கைகள் இன்னும் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படாமை தொடர்பில், பிரதான எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பை வெளியிட்டன. கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டாலும், தனக்கு ஏற்றவகையிலேயே சபை நடவடிக்கைகளை அரசு முன்னெடுக்கின்றது எனவும் அவை விசனம் வெளியிட்டன.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. இதன் போது ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பிய எதிரணி பிரதம கொறடாவான லக்ஸ்மன் கிரியல்ல,

" கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எம்மால் விடுக்கப்படும் கோரிக்கைகள் எல்லாம் உரிய வகையில் நிறைவேற்றப்படுவதில்லை. அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கையையும், ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பான அறிக்கையையும் சபையில் சமர்ப்பிக்குமாறு கேட்டிருந்தோம். அவை இன்னமும் சமர்ப்பிக்கப்படவில்லை. அரசிடம் பெரும்பான்மை இருப்பதால் தனக்கு ஏற்றவகையிலேயே செயற்படுகின்றது." - என்றார்.

அதன்பின்னர் இது குறித்து கருத்து வெளியிட்ட தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க,

" ஜனாதிபதியிடம் 2 ஆணைக்குழுக்களின் விசாரணை அறிக்கைகள் கையளிக்கப்பட்டுள்ளன. அதில் அரசியல் பழிவாங்கல் தொடர்பான அறிக்கையில் எனது பெயர் இருக்கிறது எனவும், விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவொன்று நியமிக்கப்படவுள்ளது எனவும் கூறப்படுகின்றது. அதேபோல் ஈஸ்டர் தாக்குதலில் 200க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர், சுமார் 500 பேர் வரையானோர் காயமடைந்தனர். இது சர்ச்சைக்குரிய பிரச்சினையாகும். ஜனாதிபதி ஆணைக்குழுவில் உள்ள தகவல்கள் ஊடகங்களில் வெளியாகின்றன.

ஆனால் ஆணைக்குழுவின் அறிக்கைகள் இன்னும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. அடுத்த வாரம் விவாதம் நடத்துவதற்கும் இணக்கம் காணப்பட்டுள்ளது. தாமதிக்கப்படுவதை ஏற்கமுடியாது. எனவே விரைவில் இரு அறிக்கைகளும் முன்வைக்கப்பட வேண்டும்." - என்றார்.

அதேவேளை, அறிக்கைகளை விரைவில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று சபை முதல்வரும், அமைச்சருமான தினேஷ் குணவர்தன பதிலளித்தார். (க-44)

## கொரோனாவால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு சிறப்பு ஏற்பாடு

கொழும்பு.பெப்.13

2020 கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் தோற்றும், கொரோனாத் தொற்றுக்குள்ளான மாணவர்களின் நலன் கருதி, மாவட்ட ரீதியில் விசேட பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படும் என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. கொரோனாத் தொற்றுக்குள்ளான பரீட்சார்த்திகள் இந்த பரீட்சை நிலையங்களில் பரீட்சை எழுதலாம் என்று பரீட்சைகள் ஆணையாளர் சனத் பூஜித் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், சுய தனிமைப்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்ட மாணவர்களுக்கு, அனைத்து பரீட்சை நிலையங்களிலும் மேலதிக பரீட்சை வகுப்பறைகளைத் தயார் செய்ய முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதரப் பரீட்சை எதிர்வரும் மார்ச் முதலாம் திகதி முதல் 11 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. (க-இ)

## வீரவன்சவின் மனைவி சி.ஐ.டியில் முறைப்பாடு

கொழும்பு.பெப்.13

அமைச்சர் விமல் வீரவன்சவின் மனைவி, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடொன்றை செய்துள்ளார்.

கடந்த சில நாள்களாக தனது தனிப்பட்ட வாழ்க்கைக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் சமூக ஊடகங்களில் முன்னெடுக்கப்படும் பிரசாரங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்து அவர் இந்த முறைப் பாட்டைச் செய்துள்ளார்.

அரசியல் நடவடிக்கைகளில் தனக்கும், தனது பிள்ளைகளுக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

## ஐ.நாவுக்கான நாடகமே ஜனாஸா அடக்க விவகாரம்

பிமல் சாடல்



கொழும்பு,பெப்.13

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் நெருங்குவதால், கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப்போரின் சடலங்களை அடக்கம் செய்யலாம் என்ற தகவல் வெளியிடப்பட்டுள்ளது என்று மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தனது ருவிற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ளதாவது,

ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கு அனுமதியளிக்குமாறு முஸ்லிம் மக்களும், விசேட நிபுணர்களும் சிவில் மற்றும் அரசியல் குழுக்களும் பலமுறை கோரிக்கை விடுத்தனர். ஆனால் அதற்கு அனுமதியளிப்பதற்கு அரசு மறுத்துவிட்டது.

எனினும் இப்போது ஜெனிவாக் கூட்டத்தொடர் ஆரம்பமாவதற்கு மூன்று வாரங்கள் மாத்திரமே இருக்கும் நிலையில், ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கு அனுமதியளிக்கப்படவுள்ளதாகத் தகவல் கசிந்துள்ளது.

அவ்வாறெனின் இதுவரை காலமும் தமது அன்புக்குரியவர்களை இழந்தவர்களுக்கு, இந்த அரசு எத்தனை பெரிய வலியைக் கொடுத்திருக்கிறது? இது மிகமோசமான செயற்பாடு. இது மிக மோசமான அரசு. என்றுள்ளது. (க-இ)



# மியான்மாரில் பதற்றநிலை

## மக்களின் போராட்டத்துக்கு பொலிஸாரும் ஆதரவு!

**நைபிட்டோ, பெப். 13**

**மியான்மாரில் இராணுவ ஆட்சிக்கு எதிராகவும் ஆங் சான் சூச்சியை விடுதலை செய்யவேண்டும் என்று வலியுறுத்தியும் மக்கள் போராட்டம் நடத்திவரும் நிலையில், இந்தப் போராட்டங்களுக்கு மியான்மர் பொலிஸின் ஒரு பிரிவு ஆதரவு தெரிவித்து களத்தில் இறங்கியுள்ளது.**

மியான்மாரில் கடந்த நவம்பரில் நடந்த தேர்தலில் ஆங் சான் சூச்சியின் தேசிய ஜனநாயகக் கட்சி மீண்டும் வெற்றிபெற்று ஆட்சி அமைத்தது. ஆனால், தேர்தலில் முறைகேடுகள் நடந்திருக்கின்றன எனக் கூறி புதிய அரசை ஏற்க ராணுவம் மறுத்தது. இதுதொடர்பாக மியான்மர் அரசுக்கும் ராணுவத்துக்கும் இடையே கருத்து மோதல் நீடித்து வந்த நிலையில், கடந்த சில நாள்களுக்கு முன்னர் ஆங் சான் சூச்சி தலைமையிலான கட்சியின் ஆட்சியைக் கவிழ்த்து, ராணுவம் ஆட்சிப் பொறுப்பைக் கைப்பற்றியது. அத்துடன் மக்களின் எதிர்ப்பைச் சமாளிக்கும் வகையில் ஓர் ஆண்டுக்கு அங்கு அவசரகால உத்தரவையும் பிறப்பித்தது. ஆனால் இராணுவத்தின் உத்தரவுகளையும் மீறி மியான்மர் மக்கள் போராட்டங்களை அங்கு ஆரம்பித்துள்ளனர். தலைநகர் நைபிட்டோ, வர்த்தக நகரான யாங்கூன் உள்ளிட்ட இடங்களில் பல்லாயிரம் மக்கள் திரண்டு போராட்டங்களை நடத்தி வருகின்றனர். இராணுவ வாகனங்களை முற்றுகையிட்டும் இந்தப் போராட்டங்கள் நடத்தப்படுகின்றன. சில இடங்களில் இராணுவத்தினருக்கு எதிராகத் தாக்குதல்களும் பதிவாகியுள்ளன. இந்தப் பதற்றமான நிலையில் மியான்மர் பொலிஸின் ஒரு பிரிவு மக்களின் உணர்வுகளை மதிக்கிறோம் என்று தெரிவித்து போராட்டத்தில் தன்னையும் ஈடுபடுத்தியுள்ளது. பொலிஸாரின் இந்த திடீர் ஆதரவு மியான்மர் மக்களின் போராட்டத்துக்கு வலுச் சேர்த்துள்ளது என்றும் இதனால் போராட்டம் இன்னும் தீவிரமாக வாய்ப்புக்கள் அதிகம் என்றும் சுட்டிக் காட்டப்படுகின்றது. (ம)



# 1001 நாள்களின் பின்னர் லூஜின் விடுதலை!

**ரியாத், பெப். 13**

சவூதி அரேபியாவின் சமூகச் செயற்பாட்டாளரான லூஜின் அல் ஹத்லால் 1001 நாள்களின் பின்னர் சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டார். லூஜின் அல் ஹத்லால் சவூதியில் பெண்கள் வாகனம் ஓட்டுவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும் எனவும், பெண்களுக்குரிய ஏனைய சில உரிமைகள் வழங்கப்படவேண்டும் என்றும் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார். அவர் 2018ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு 3 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டார். லூஜின் விடுவிக்கப்பட வேண்டும் என்று சர்வதே அளவில் குரல்கள் வலுத்தன. இந்த நிலையில் சுமார் 1001 நாள்களின் பின்னர் அவ விடுவிக்கப்பட்டுள்ளார். ஆனால் அழுத்தா கள் காரணமாக லூஜின் விடுவிக்கப்ப வில்லை. அவரின் சிறைத்தண்டனை காலம் முடிவடைந்தே அவர் விடுவிக்கப் டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம



# மியான்மர் இராணுவத்தினர் மீது அமெ. பொருளாதாரத் தடைகள்

மியான்மாரில் ஆங் சான் சூச்சியும் அவரின் சகாக்களும் சிறைப்படுத்தப்பட்டு இராணுவ ஆட்சி அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், மியான்மர் இராணுவத் தலைவர்கள் சிலருக்கு எதிராகக் கடும் பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது அமெரிக்கா.

இது தொடர்பில் அமெரிக்க அதிபர் பைடன் தெரிவித்ததாவது:

'மியான்மாரில் நடந்த சதித்திட்டத்தின் மீதான தொடர்ச்சியான நடவடிக்கைகளை அறிவிக்கிறேன். அமெரிக்காவில் மியான்மர் அரசாங்க நிதியில் இருந்து ஒரு பில்லியன் டொலர்களை எடுப்பதற்கான முறையற்ற அணுகலைத் தடுக்க அமெரிக்க அரசு நடவடிக்கை எடுக்கிறது.

மியான்மாரில் ஆட்சிக் கவிழ்ப்புடன் தொடர்புடைய ராணுவத் தலைவர்கள், அவர்களது வணிக நலன்கள், நெருங்கிய குடும்ப உறுப்பினர்கள் மீது பொருளாதாரத் தடை விதிக்கும் நிர்வாக உத்தரவுக்கு ஒப்புதல் அளித்துள்ளேன்' - என்றார். (ம)



# ஜோ பைடன் - ஜின்பிங் தொலைபேசியில் பேச்சு!

**பீஜிங், பெப். 13**

அமெரிக்க அதிபர் ஜோ பைடன் மற்றும் சீன அதிபர் ஜி ஜின்பிங் இருவரும் தொலைபேசியில் பேச்சு நடத்தியுள்ளனர்.

அமெரிக்காவின் முன்னாள் அதிபரான ட்ரம்பின் ஆட்சிக்காலத்தில் அமெரிக்கா - சீனா இடையில் பெரும் வர்த்தக மோதல் வெடித்தது. மூன்றாம் உலகப் போர், வர்த்தகத்தை மையப்படுத்தியதாக இருக்கும் என்றும், அதன் தோற்றுவாய்தான் அமெரிக்கா - சீனா இடையிலான வரி மோதல் என்றும் கருதப்பட்டது. இந்த நிலையில் ட்ரம்பைத் தொடர்ந்து ஆட்சியமைத்த ஜோ பைடன் சீனாவுடனான உறவைச் சீர் செய்வார் என்று கருதப்பட்டது. இத்தகையதொரு பின்னணியில் மேற்ப தலைவர்கள் இருவரும் தொலைபே யில் பேச்சு நடத்தியுள்ளனர்.

சீனாவின் நியாயமற்ற பொருளாதா செயற்பாடுகள், ஹொங்கொங்கி தேசிய பாதுகாப்புச் சட்டம் கொண் வந்து ஜனநாயக ஆர்வலர்களை ஒ கும் சீனாவின் நடவடிக்கைகள், சின் யாங்கில் உய்குர் இன மக்கள் மீ சீனா கட்டவிழ்த்து விடும் மனித உரி மீறல்கள் தொடர்பில் பைடன் த அதிருப்தியைத் தெரிவித்தார். அதே ரம் மோசமான உறவால் இரு த புகளுக்கு பேரழிவு ஏற்படும் என்று பைடனிடம் ஜின்பிங் எச்சரித்தார் என வெள்ளை மாளிகை அறிக்கையிட் ளது.

# வன்னேரிக்குளம் சுற்றுலாமையத்தின் அபிவிருத்தியை பூரணப்படுத்தித் தருக

## அக்கராயன் பகுதி பொது அமைப்புக்கள் கோரிக்கை

**கிளிநொச்சி, பெப்.13**

**கிளிநொச்சி மாவட்டத்தில் பறவைகள் சரணாலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள கரைச்சி பிரதேச சபைக்குட்பட்ட வன்னேரிக்குளம் பகுதியை அபிவிருத்திசெய்து பூரணப்படுத்தித் தருவதன்மூலம், அப்பகுதியில் வசிக்கும் கிராம மக்களின் வாழ்வாதாரம் மேம்படும் என அக்கராயன் பகுதி பொது அமைப்புக்கள் தெரிவிக்கின்றன.**

அது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த 2017ஆம் ஆண்டு வடக்கு மாகாண சபையால் 6.5 மில்லியன் ரூபா செலவில் வன்னேரிக்குளத்தில் சுற்றுலாமையம் அமைக்கப்பட்டு கரைச்சி பிரதேச சபையிடம் கையளிக்கப்பட்டிருந்தது. எனினும் சுற்றுலாமையம் வினைத்திறனுடன் செயற்படுவதற்குரிய அபிவிருத்திகள் போதாத காரணத்தாலும், சுற்றுலாப்பயணிகள் வருவதற்கு அக்கராயன் தொடக்கம் வன்னேரி வரையான பாதை சீரின்மை காரணமாகவும் சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைவடைந்தே காணப்பட்டது.

தற்போது ஏ-9 மற்றும் ஏ-32 ஆகிய இரு பிரதான வீதிகளை இணைக்கும் முறிகண்டி ஜெயபுரம் வீதி, வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் புனரமைக்கப்பட்டு வரும் நிலையில் சுற்றுலாப்பயணிகள் வருகை அதிகரிக்கும். இயற்கை அழகுவாய்ந்த குளக்கரையுடன் கூடிய சுற்றுலாமையத்தை வினைத்திறனுடன் செயற்படுத்தினால் உள்ளூர் உற்பத்திப்பொருள்களின் விற்பனை கூடுவதுடன், சுயதொழில்வாய்ப்பில் ஈடுபட்டுள்ள கிராம மக்கள் பயனடைவர். படகுமூலமான சவாரியில் பறவைகளைப் பார்வையிடல், உயரமான கண்காணிப்புக் கோபுரங்களை அமைத்து பறவைகளை கண்காணித்தல், பொழுதுபோக்கு மீன்பிடியில் ஈடுபடுவோர் மீன்களை சமைத்து உண்ணும் வகையில் உணவகம் அமைத்தல். இயற்கையுடன்கூடிய வைக்கோல். பனை ஓலை. கிடுகு போன்றவற்றால் சுற்றுலாபயணிகள் தங்கிச்செல்ல வாடி வீடமைத்தல் போன்ற அபிவிருத்தித் திட்டங்களை முன்னிறுத்தி கடந்த வருடம் உலகவங்கியால் பிரதேச சபையூடாக உபகருத்திட்டத்தின் கீழ் 8 மில்லியன் ரூபா அபிவிருத்திக்கான நிதி ஒதுக்கீட்டை சுற்றுலாமையத்துக்கு வழங்குமாறு எமது பிரதேச மக்கள் பிரதிநிதிகளூடாக கரைச்சி பிரதேச சபைக்கு முன்மொழிவொன்றை அனுப்பினோம்.

ஆனாலும், இது தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட உதவி உள்ளூராட்சி அலுவலகம் முன்மொழிவை நிராகரிக்கின்றது. பெரும்பான்மையின மக்கள் வசிக்கக் கூடிய மாவட்டங்களில் குளங்களின் அருகிலேயே சுற்றுலாமையங்கள் அமையப் பெற்றுள்ளன. 2017ஆம் ஆண்டு நீர்ப்பாசனத் திணைக்களத்திடமிருந்து பெறப்பட்ட அனுமதியுடனேயே வடக்கு மாகாண சபை சுற்றுலாமையத்தை அமைத்துள்ளது. அதைமேலும் அபிவிருத்தி செய்துதருமாறே நாங்கள் கோருகின்றோம். இச் சுற்றுலாமையம், அபிவிருத்தி பூரணப்படுத்தப்பட்டு வினைத்திறனுடன் செயற்படுமானால், வன்னேரிக்குளம் கிராம மக்களும் அதனைச் சூழவுள்ள கிராமங்களின் மக்களும் சுற்றுலாப்பயணிகளால் பொருளாதார மேன்மையடையும் நிலை ஏற்படும் என அக்கராயன் பகுதி பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் தெரிவிக்கின்றனர். (ந-12)



# அறுவடை செய்த நெல்லை வீதியில் காயவிடும் அவலம்

## விவசாயிகள் கவலை

முல்லைத்தீவு, பெப். 13

கிளிநொச்சி மாவட்டங்களில் நெல் அறுவடைக்கு பின் அதனை உலரவிடுவதற்கு போதியளவு தளம் இல்லாமையால் வீதிகளில் உலரவிடும் நிலை ஏற்பட்டுள்ளது என விவசாயிகள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;

நெல் உலரவிடுவதற்கான தளம் இல்லாத பிரச்சினை தொடர்ச்சியாகக் காணப்பட்டு வருகிறது. இதனால் நாம் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றோம். வீதியில் பயணிப்போர் எம்மோடு முரண்படுகின்றனர். அவர்கள் முரண்படுவதிலும் நியாயம் இருக்கிறது. அதே நேரம் எமக்கும் வேறு வழியில்லை. ஆயிரக்கணக்கான ஏக்கரில் நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகின்றபோதும் ஆங்காங்கே ஒரு சில நெல் உலரவிடும் தளங்களே உள்ளன. இது போதுமானது அல்ல. நெல்லை உலர விட்டு விற்பனை செய்தால் நியாயமான விலைக்கு விற்பனை செய்ய முடியும். மாறாக அறுவடை செய்தவுடன் விற்பனை செய்வதனால் கொள்வனவாளர் ஈரப்பதத்தைக் காரணம் காட்டி நியாயமான விலைக்கு கொள்வனவு செய்வதில்லை. எனவே இது தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றனர். (ப-214)



# முன்பள்ளிச் சிறார்களுக்கு கற்றல் உபகரணங்கள்

மன்னார், பெப். 13

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட முன்பள்ளிச் சிறார்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் காலை 11 மணியளவில் இலுப்பக்கடவை பொது மண்டபத்தில் இடம் பெற்றது.

ரியா பணப் பரிமாற்று நிறுவனத்தின் அனுசரணையில் ஸானு அறக்கட்டளையின் ஏற்பாட்டில், அதன் மன்னார் மாவட்ட இணைப்பாளர் சந்தாம்பிள்ளை ஜேசுதாசன் தலைமையில் குறித்த நிகழ்வு இடம் பெற்றது. 1000 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கும் செயற்றிட்டத்தின் கீழ் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 50 சிறார்களுக்கு பாடசாலை கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பாலியாறு, இலுப்பக்கடவை, பெரியமடு, கோவில் குளம் ஆகிய கிராமங்களில் உள்ள முன்பள்ளிச் சிறுவர்களுக்கே குறித்த பாடசாலை கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. நிகழ்வில் இலுப்பக்கடவை பங்குத்தந்தை, ஸானு அறக்கட்டளையின் பிரதிநிதிகள், முன்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி கலந்து கொண்டிருந்தனர். (ப-56)

# வாகன விபத்துக்கள்; மூவர்காயம்



வவுனியா, பெப். 13

வவுனியா ஓமந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பன்றிக்கெய்த குளம் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள்-பட்டா ரக வாகன விபத்தில் இருவர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பன்றிக்கெய்தகுளம் பகுதியிலிருந்து வவுனியா நோக்கி மோட்டார் சைக்கிளில் இருவர் பயணித்துக்கொண்டிருந்த போது. மோட்டார் சைக்கிளின் பின்புறமாக வந்த பட்டா ரக வாகனம் மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டு விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் காயமடைந்த நிலையில் ஓமந்தைப் பிரதேச மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவ இடத்துக்கு விரைந்த ஓமந்தைப் பொலிஸார் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ந-18)



கிளிநொச்சி, பெப்.13

கிளிநொச்சி ஏ-9 வீதியின் பரந்தன் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் காயமடைந்து கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். ஏ-9 வீதிவழியாக பரந்தன் நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று கப்ரக வாகனம் ஒன்றுடன் மோதி நேற்று இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்தின்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த நபரே இவ்வாறு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். விபத்துத் தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (வ-6)

# நிறுத்தல் கருவிகளுக்கு முத்திரையிடல்

கிளிநொச்சி,பெப்.13

நிறுக்கும் மற்றும் அளக்கும் உபகரணங்களுக்கு, எதிர்வரும் 19 ஆம் மற்றும் 20 ஆம் திகதிகளில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தில் முத்திரையிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே 12 மாதங்களில் முத்திரையிடப்படாத சகல நிறுவை மற்றும் அளவை உபகரணங்களுக்கும் முத்திரையிட்டுக்கொள்ளுமாறு, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்துக்குட்பட்ட சகல வர்த்தகர்களும் கேட்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஆண்டு முத்திரையிடாத கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ஏனைய நிறுவை, அளவை உபகரணங்களுக்குரிய முத்திரையிடல் எதிர்வரும் 22 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்டச்செயலக வளாகம் 2 இல் அமைந்துள்ள அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தில் இடம்பெறும்.

வர்த்தகர்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி வருகை தருமாறு கிளிநொச்சி மாவட்டச் செயலக அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. (க-6)

# சர்வதேச நீதிமன்றுக்கு செல்லத்தயங்க மாட்டேன்

கொழும்பு பேராயர் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 13

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு உள்நாட்டு சட்டத்தின் பிரகாரம் உரிய நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் நீதிக்காக சர்வதேச நீதிமன்றத்தை நாடுவதற்கு தயாராகவே இருக்கின்றேன் என்று பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

குறித்த தாக்குதல்கள் தொடர்பில் விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி விசாரணை அறிக்கை இன்னும் எனக்கு கிடைக்கவில்லை.

ஜனாதிபதி ஆணைக்குழுவில் நானும் சாட்சியம் வழங்கினேன். இதன்போது குறித்த தாக்குதலை தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காதவர்கள் குறித்து மட்டும் விசாரிக்காமல், தாக்குதலின் பின்னணியில் செயற்பட்டவர்கள் யார் என்பது தொடர்பிலும் விசாரணை நடத்துமாறு கோரினேன்.

இந்தக்கோரிக்கைக்கு அறிக்கை ஊடாக ஆணைக்குழு நல்ல பதிலை வழங்கியிருக்கும் என நம்புகின்றேன். இது விடயத்தில் இன்னும் பொறுமை காப்பதற்கு எமது மக்கள் தயாரில்லை. ஆணைக்குழு மற்றும் அரசு ஊடாக நீதி கிடைக்காவிட்டால் வேறு தீர்மானங்களை எடுக்க நேரிடும். நீதிக்காக சர்வதேச நீதிமன்றத்தை நாடுவதற்குகூட தயாராகவே இருக்கின்றேன்.

ஆனால் அவ்வாறானதொருநிலை ஏற்படுவதற்கு எமது நாட்டு தலைவர்கள் இடமளிக்கமாட்டார்கள் என நம்புகின்றேன். ஏற்கனவே சர்வதேச நீதிமன்ற பிரச்சினையொன்று இருக்கின்றது. எனவே, எமக்கு நீதியை பெற்றுக்கொடுப்பார்கள் என நம்புகின்றோம். என்றார். (கு-44)


## மரண அறிவித்தல்

தோற்றம் · 17 · 12 · 1940



மறைவு · 12 · 02 · 2021

### திரு. குமாரவேலு சிவஞானம்
(சமாதான நீதவான்)

வட்டு வடக்கு, சித்தங்கேணியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு. குமாரவேலு சிவஞானம் (சமாதான நீதவான்) அவர்கள் நேற்று (12.02.2021) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் கலைவாணியின் அன்புக் கணவரும், பகிரதன், மோகனதாஸ், அமுதசுரபி, மோகனரங்கன், நல்லைநாதன், அமிர்தவதனி, அரிகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.02.2021) சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வட்டுக்கோட்டை, கொத்துத்துறை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
077 138 2731

## மரண அறிவித்தல்



### பொன்னுத்துரை அருந்தவநாதன்
(ஓய்வுபெற்ற நீதிமன்ற உத்தியோகத்தர்)

சாவகச்சேரி மட்டுவிலை பிறப்பிடமாகவும், இல 709 சிவிக் சென்ரர் வட்டக்கச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை அருந்தவநாதன் (ஓய்வுபெற்ற நீதிமன்ற உத்தியோகத்தர்) கடந்த (11.02.2021) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் இந்திரபவானியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் சிவபாக்கியம் தம்பதியரின் மூத்த புதல்வனும், விநாயகமூர்த்தி தவமணிதேவி தம்பதியரின் அன்பு மருமகனும், அருந்தவ ஜெயந்தி (வட்டக்கச்சி), உதயநாதன் (பிரான்ஸ்), குகநாதன் (காணி ஆணையாளர்), சத்தியநாதன் (வட்டக்கச்சி), சத்திய வதனி (மாவட்ட வைத்தியசாலை, கிளிநொச்சி), சோதிநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரனும், சதீஸ் (ஜேர்மனி), சுரேகா (மாவட்டச் செயலகம், கிளிநொச்சி), தினேஸ் (ஜேர்மனி), சுஜித்தா (லண்டன்), சாரலன் (கிளிநொச்சி மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிந்துகா (ஜேர்மனி), பிரபாகரன் (வட்டக்கச்சி), நளாயினி (ஜேர்மனி), ராஜ்குமார் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சாதுரி (கிளி, வட்டக்கச்சி மத்திய கல்லூரி), சஞ்சயன் (கிளி, வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயம்), அஜீசனா, ஆரோகி, தசாபன் (ஜேர்மனி), ஓவியா, அபூர்பா (லண்டன்) ஆகியோரின் பேரனும், கிருஸ்ணபவானி, கலாபவானி, சத்தியசீலன், புனிதபவானி, மோகனசீலன், ஜெயபவானி, புஸ்பவானி, தயசீலன், பிரமிளா, மற்றும் காலஞ்சென்ற தெய்வவேற் பரமநாதன், சிவசெல்வி, சிவசாந்தினி, இந்திரன், பராசக்தி, சுவர்ணா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (12.02.2021) வெள்ளிக்கிழமை பி.ப 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பன்னாங்கண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### மார்க்கண்டு பூமணி

நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு பூமணி அவர்கள் நேற்று (12.02.2021) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பண்டாரி - குஞ்சரம் அவர்களின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை, சின்னக்குட்டி அவர்களின் பாசமிகு மருமகளும், அமரர் வேலுப்பிள்ளை மார்க்கண்டு அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற நாகன் அவர்களின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற பாக்கியம் அவர்களின் அன்பு மைத்துனியும், யோகேந்திரன் (கனடா) யோகேஸ்வரன், யோகேஸ்வரி சுவேந்திரன், சுரேஸ், மோகனவதனி (இத்தாலி) லக்ஸ்மன்ராஜ் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், லீலாவதி (கனடா) சகுந்தலாதேவி, இராஜரட்ணம், ராஜினி (ஆசிரியர் - அருணோதயக் கல்லூரி) சுகுணமதி (உதவி அதிபர் - ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலை), சதானந்தசிவம் (இத்தாலி) யாழினி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், விதுஜன் (கனடா) சாரங்கா (கனடா) ஷபீனா, ஷமீதா, பிரியங்கா, ஜெரோசிகா (தொழில்நுட்ப உதவியாளர், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, யாழ்) லதூஜன், தர்மிகா, விஸ்ணுஜன், சுரமிதன், ஆராதனா, ஆராதிகா, ஆருக்ஷன், ஆதீஸ் (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14.02.2021 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிணமுருங்கை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 0061 829, 077 9989 887,
077 6481 521

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### செல்வி சுந்தரம்பிள்ளை மகேஸ்வரி

யாழ்ப்பாணம் உரும்பிராய் கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சுந்தரம்பிள்ளை மகேஸ்வரி அவர்கள் 12.02.2021 அன்று காலமானார்.

அன்னார் சுந்தரம்பிள்ளை தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்புப் புதல்வியும் அமரர் நாகலிங்கம் BOC, மற்றும் திருமதி ஈஸ்வரி, அமரர் சற்குனேஸ்வரி மற்றும் பஞ்சலிங்கம் T.K.(MD) அவர்களின் அன்புச் சகோதரியும், சாவித்திரி அமரர் கணேசமூர்த்தி, திருச்செல்வம் (ஆசிரியர்) புஸ்பவதி ஆகியோரின் மைத்துனியும், வரதனின் மாமியும், ஸ்ரீ விக்னேஸ்வரன், திருமகள், கலைமகள், சிவகாமி, ரேவதி ஆகியோரின் அன்பு சிறியதாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14.02.2021 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இளங்காடு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: பஞ்சலிங்கம்
அரச வீதி, உரு. கிழக்கு.
021 223 2010

## கரம்பைக்குறிச்சி அ.த.க.வில் கால்கோள் விழா

கொடிகாமம், பெப். 13

தென்மராட்சி கரம்பைக்குறிச்சி அ.த.க. பாடசாலையின் முதலாம் ஆண்டு மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு எதிர்வரும் திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு அதிபர் க.இளங்கோவனின் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (த-159)


### பாராட்டி வாழ்த்துகின்றோம்



கடந்த 2020 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்திற்கும் ஆசிரியர்களுக்கும் பெருமை சேர்த்த எமது அன்பு மகன்

**செல்வன் ம.திவ்யன்** அவர்களை

பாராட்டி வாழ்த்துவதோடு ஆசிரியர்களுக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**வாழ்த்துவோர்:**
**திரு.திருமதி பெ.மருசலின் (பெற்றோர்)**


# முல்லை, கிளிநொச்சி எல்லைப் பிரச்சினை;
# விசுவமடு சந்தை வியாபாரிகளின் வியாபார நடவடிக்கைகள் பாதிப்பு

**முல்லைத்தீவு, பெப். 13**

**முல்லைத்தீவு மாவட்டத்தினதும், கிளிநொச்சி மாவட்டத்தினதும் எல்லைப்பகுதியில் புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்கு உட்பட்ட விசுவமடு சந்தை அமைந்துள்ளதால் இரு பிரதேச சபைகளும் வெளி வியாபாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதில் பின் நிற்கின்றன என்று விசுவமடு சந்தை மரக்கறி, வெற்றிலைக் கடை வியாபாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.**



இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;

கொரோனா காலத்தில் சந்தை வளாகத்துக்குள் வியாபாரம் செய்யவேண்டாம் என்று பிரதேச சபை அறிவித்துள்ள நிலையில் வீதிகளில் வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்எப்பட்ட போது அனைவரும் வியாபாரம் செய்தார்கள். இப்போது மீண்டும் சந்தைகளில் வியாபார நடவடிக்கை தொடங்கியுள்ள நிலையில் மக்கள் சந்தைக்குள் வருவதைக் குறைத்துள்ளார்கள். காரணம் வீதிகளில் தற்போதும் மரக்கறிகளையும் ஏனைய பொருள்களையும் போட்டு விற்கின்றார்கள். குறிப்பாக விசுவமடுச் சந்தையில் இருந்து ஒரு கிலோமீற்றர் தொலைவில்தான் வியாபார நடவடிக்கை செய்யவேண்டும் என்று பிரதேச சபையால் அறிவிக்கப்பட்டும் சந்தையில் இருந்து 50 மீற்றர் தாண்டினால் அந்த பிரதேசம் கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபைக்கு சொந்தமான பிரதேசமாக காணப்படுகின்றது. எல்லைப்பகுதியில் விசுவமடுச் சந்தை அமைந்துள்ளதால் இரு மாவட்ட எல்லைக்குட்பட்ட பிரதேச சபையினரும் நடவடிக்கை எடுப்பதில் பின்னடிக்கின்றார்கள் இதனை மாகாணம் வரை கொண்டு சென்று இதற்கான தீர்வைப் பெற்றுத்தரவேண்டும் என்றனர். (ஐ-19)


### கண்ணீர் அஞ்சலி

சங்க உறுப்பினர்
**திருமதி யுவந்தினி கிருஷ்ணதிலீபன்**
அவர்களின் பாசமிகு தந்தையார்

**அமரர் சின்னத்தம்பி செல்வராசா**

அவர்கள் கடந்த 14.01.2021 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஊழியர் நலன்புரிச் சங்கம்**
**தென்மராட்சி பிரதேச செயலகம்.**

### கண்ணீர் அஞ்சலி



எமது அலுவலகத்தில் கடமையாற்றும்
**திருமதி ப.நந்தினி** அவர்களின் அன்புத் தாயார்
**அமரர்**
**அப்பலிங்கம் சந்திரவதனா**
அவர்களின்
பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

**ஊழியர் நலன்புரிச் சங்கம்**
**வலிகாமம் தெற்கு பிரதேச சபை - சுன்னாகம்.**

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
## 35வது பொதுப்பட்டமளிப்பு வைபவம் - 2021

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 35வது பொதுப்பட்டமளிப்பு வைபவம் மாசி மாதம் 24ம் மற்றும் 25ம் திகதிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உள்ளக விளையாட்டு அரங்கில் 06 அமர்வுகளாக நடைபெறும்.**

இப்பட்டமளிப்பு வைபவத்தில் பட்டம் பெறுவோருக்கு கீழ்குறிப்பிட்ட திகதிகளில் பட்டமளிப்பு அங்கிகள் **பல்கலைக்கழக ஆவணக் காப்பகத்தில்** பெற்றுக் கொள்ள முடியும். பட்டமளிப்பு வைபவத்திற்கான அங்கிகளைப் பெற்றுக்கொள்ளும்போது ஆள்அடையாளத்தை உறுதிப்படுத்தக் கூடியதான பல்கலைக்கழக அடையாள அட்டை அல்லது தேசிய அடையாள அட்டையினைக் காண்பித்தல் வேண்டும்.

தமக்காக குறித்தொதுக்கப்பட்ட பட்டமளிப்பு அமர்வு விபரங்களையும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வி விவகாரங்கள் மற்றும் வெளியீட்டுக்கிளையின் அறிவித்தல் பலகையிலும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையத்தளத்திலும் பார்வையிடலாம். முகவரி www.jfn.ac.lk

| திகதி | நேரம் | பட்டம் |
|---|---|---|
| 18.02.2021<br>வியாழக்கிழமை | மு. ப. 09.00 –பி.ப 12.30<br>பி. ப. 01.30 –பி.ப. 03.30 | • கலைமாணி (சிறப்பு)<br>• கலைமாணி (பொது)<br>• சட்டமாணி |
| 19.02.2021<br>வெள்ளிக்கிழமை | மு. ப. 09.00 – பி.ப 12.30<br>பி. ப. 01.30 – பி.ப. 3.30 | • வியாபார நிர்வாகமாணி (பொது)<br>• வியாபார நிர்வாகமாணி (சிறப்பு)<br>• வணிகமாணி<br>• நுண்கலைமாணி (கர்நாடக சங்கீதம்)<br>• நுண்கலைமாணி (பரதம்)<br>• நுண்கலைமாணி (சித்திரமும் வடிவமைப்பும்) |
| 20.02.2021<br>சனிக்கிழமை | மு. ப. 09.00 – பி.ப 02.00 | • கணனி விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி (சிறப்பு), (பொது) 2017<br>• கணனி விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி (சிறப்பு), (பொது) 2018<br>• விஞ்ஞானமாணி (சிறப்பு), (பொது) 2017<br>• விஞ்ஞானமாணி (சிறப்பு), (பொது) 2018<br>• பிரயோக விஞ்ஞானத்தில் (சிறப்பு) விஞ்ஞானமாணி<br>• சித்தவைத்தியமாணி மற்றும் சத்திரசிகிச்சை மாணி 2017<br>• சித்தவைத்தியமாணி மற்றும் சத்திரசிகிச்சை மாணி 2018 |
| 21.02.2021<br>ஞாயிற்றுக்கிழமை | மு. ப. 09.00 – பி.ப 02.00 | • கலாநிதி<br>• முதுமெய்யியல்மாணி<br>• பண்பாட்டுக்கலையில் முதுகலைமாணி,<br>• சைவசித்தாந்தத்தில் முதுகலைமாணி<br>• முதுவியாபார நிர்வாகமாணி<br>• கல்வியியலில் முதுமாணி<br>• கல்வியியலில் பட்டப்பின் தகைமைச்சான்றிதழ் (முழுநேரம்) 2017<br>• கல்வியியலில் பட்டப்பின் தகைமைச்சான்றிதழ் (முழுநேரம்) 2018<br>• இரண்டாம் மொழியாக ஆங்கிலத்தில் பட்டப்பின் தகைமைச்சான்றிதழ் |
| 22.02.2021<br>திங்கட்கிழமை | மு. ப. 09.00 – பி.ப 12.30<br>பி. ப. 01.30 – பி.ப. 03.30 | • வைத்தியமாணி மற்றும் சத்திரசகிச்சைமாணி<br>• தாதியியலில் (சிறப்பு)விஞ்ஞானமாணி 2017<br>• தாதியியலில் (சிறப்பு)விஞ்ஞானமாணி 2018<br>• மருந்தகவியல்மாணி (சிறப்பு) 2017<br>• மருந்தகவியல்மாணி (சிறப்பு)2018<br>• மருத்துவ ஆய்வுகூட (சிறப்பு) விஞ்ஞானமாணி 2017<br>• மருத்துவ ஆய்வுகூட (சிறப்பு) விஞ்ஞானமாணி 2018<br>• விவசாய விஞ்ஞானமாணி<br>• பொறியியல் விஞ்ஞானமாணி |

**குறிப்பு:**
1) பட்டதாரி மாணவர்கள் தொழில் பெறு இயலுமைக்கான கேள்விக் கொத்தினைப் பெற்று, முறையாகப் பூரணப்படுத்தி பட்டமளிப்பு அங்கிகளைப் பெறுவதற்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும்.
2) பல்கலைக்கழகத்திற்கு வரும் பட்டதாரிகள் கொவிட் சுகாதார நடைமுறைகளை பின்பற்றுதல் கட்டாயமானது.

**பதிவாளர்**


## நெல் சந்தைப்படுத்தலில் பெரும் மோசடி செய்த 6 அதிகாரிகள் பணிநீக்கம்

கொழும்பு, பெப். 13

நெல் சந்தைப்படுத்தல் சபையில் இடம் பெற்றதாகக் கூறப்படும் பெரும் மோசடி தொடர்பில் சிரேஷ்ட முகாமைத்துவ அதிகாரிகள் 6 பேர் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர் என்று விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

சேவையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ள அதிகாரிகளின் கடமைகளை நிறைவேற்ற, அமைச்சின் அலுவலர்களை நியமிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் தெரிவித்துள்ளார்.

விவசாயிகளிடமிருந்து நெல் கொள்வனவு செய்தபோதும், அதனை விற்பனை மற்றும் களஞ்சியப்படுத்தியபோதும் பெரும் மோசடிகள் இடம்பெற்றுள்ளன என்று அமைச்சர் தெரிவித்தார்.

சம்பவங்கள் தொடர்பில் நெல் சந்தைப்படுத்தல் சபையின் பிரதிப் பொது முகாமையாளர்கள் இருவர், மாவட்ட முகாமையாளர்கள் 4 பேர் ஆகியோரே சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர் என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார். (த-இ)

**கணிதம்,வரலாறு 06-O/L-A/L**

தனியாகவோ, குழுவாகவோ வீடுகளுக்கு வந்து அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும். தேசிய மாவட்ட ரீதியில் சிறந்த பெறுபேற்றுக்காக வழிகாட்டும் ஆசிரியர்.

**T.P: 077 968 2097**

## காலாண்டு நினைவஞ்சலி



பிறப்பு 1955.04.09 இறப்பு 2020.08.17


அமரர்
**கானதாசன் செல்வராணி**

எம் குடும்ப பாச விளக்காய்
ஒரு கூட்டுக் கிளியாக
எம்மோடு வாழ்ந்து
எம்மையெல்லாம் தவிக்கவிட்டு
விண்ணுலகு புகுந்த உங்களை
நாம் எண்ணாத நாளில்லையம்மா?

No:60,
பூந்தோட்டம் ஒட்டுசுட்டான்
முல்லைத்தீவு.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



பிறப்பு 20 . 05 . 1959 இறப்பு 09 . 02 . 2021

**முத்தையா சுபேந்திரன் (ஸ்ரீ)**

புங்குடுதீவு 12ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் கனடா ஸ்காபரோவில் வசித்தவருமாகிய முத்தையா சுபேந்திரன் 09.02.2021 செவ்வாய்க்கிழமை கனடாவில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா விசாலாட்சி தம்பதியரின் அருமைப்புதல்வரும், காலஞ்சென்றவர்களான குமாரசாமி (யாழ்.பிரபல வர்த்தகர்)-சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் ரேனுகா வின் (கனடா) அன்புக் கணவரும், சகிலா வின் (கனடா) பாசமிகு தந்தையும், நமணன் (கனடா) அன்பு மாமனாரும், அர்ஜுனாவின் (கனடா) செல்லப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14.02.2021 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும்.

அன்னாரின் துக்க நிகழ்வானது யாழ்ப்பாணத்தில் அவரது மைத்துனர் S.K. சண்முகலிங்கம் J.P (ஓய்வுநிலை அதிபர்) அவர்களின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

69, சீனிவாசகம் வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.
076 453 9716, 021 222 8722

தகவல்:
S.K.சண்முகலிங்கம் J.P
முன்னாள் அதிபர்
யா/புங்குடுதீவு ஸ்ரீ கணேச ம.வி

**வாடகைக்கு அறை தேவை**

யாழ். நகர், அன்னசத்திரம் வீதியில் அலுவலகப் பாவனைக்கு அறை ஒன்று வாடகைக்கு தேவை.

**தொடர்பு: 078 282 4069**

## 31ஆம் நாள் நினைவும் நன்றி நவிலலும்



மண்ணுலகில் 28.10.1932 இறைவனடியில் 14.01.2021

அமரர் **வேலாயுதபிள்ளை அன்னம்மா**
(கொடிகாமம் - சாவகச்சேரி)

கடந்த 14.01.2021 இல் காலமாகிய எங்கள் குடும்ப தலைவி வேலாயுதபிள்ளை அன்னம்மா அவர்களின் மரண செய்தி அறிந்து அவரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு துயர் பகிர்ந்து கொண்ட அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் மேலும் நேரில் வந்தோருக்கும் மற்றும் தொடர்பாடல் மூலமாக தங்கள் அனுதாபங்களையும் உணர்வினையும் வெளிப்படுத்திய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்து கொள்கின்றோம். அன்னாரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் (சாவகச்சேரி) இன்று (13.02.2021) நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கிருஷ்ணபவனம்
சாவகச்சேரி வடக்கு,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்

## பத்தாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 18 . 02 . 1942 உதிர்வு 06 . 03 . 2011

**அமரர் கணபதிப்பிள்ளை சண்முகலிங்கம் (J.P)**
(ஓய்வுபெற்ற அதிபர், யாழ் நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை)

பாசத்தின் உறைவிடமாய்
பண்பான எம் தந்தையாய்
அன்புடனும் அரவணைப்புடனும்
வளர்த்து ஆளாக்கி விட்ட தெய்வமே
நேரிய வழி காட்டிய குல விளக்கே
பார் போற்ற வாழ்ந்த பண்பாளரே
பத்தாண்டு சென்றாலும் ஆறிடுமோ எம் நெஞ்சம்
பரிதவிக்கின்றோம் அழியா நினைவுகளுடன் அப்பா

132, திருமகள் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## 31ம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு 21 . 06 . 1940 இறப்பு 14 . 01 . 2021

கடந்த 14.01.2021 வியாழக்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

அமரர்
**தம்பையா சோமசுந்தரம்**

அன்னாரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 13.02.2021 சனிக்கிழமை பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

கந்தசாமி கோவிலடி,
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

குடும்பத்தினர்.
076 143 8482

# பொருளாதாரத் தடை வராதவாறு சவால்களை அரசு எதிர்கொள்ளும்!

கொழும்பு, பெப். 13

இலங்கை மீது பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படாத விதத்தில் செயற்படக்கூடிய ஆற்றல் தற்போதைய அரசுக்கு இருக்கின்றது என்று வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

இலங்கை மீது பொருளாதாரத் தடைகள் வரக்கூடும், இதனால் பொருளாதாரம் பாதிக்கப்படக்கூடும் என்ற அச்சம் வர்த்தகர்கள் மத்தியில் இருக்கின்றது. இது தொடர்பில் தங்கள் கருத்து என்னவென எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையின் பொருளாதாரத்தில் கைவைப்பதற்கு சில மேற்குலக நாடுகள் முயற்சிக்கின்றன. அவ்வாறான நாடுகளுக்கும், அங்குள்ள அமைப்புகளுக்கும் யதார்த்த நிலைமை குறித்து எடுத்துரைக்கப்படும். அவர்கள் அறிந்திராத பல தகவல்களை முன்வைப்பதற்கு இலங்கையால் முடியும்.

இலங்கையில் முற்போக்கு சக்தியொன்று நாட்டை ஆளும் பட்சத்தில் தமது நாட்டுக்கு எதிரானவற்றைத் தோற்கடிப்பதற்கே அரசு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. எனவேதான் எமக்கு ஏதோவொரு விதத்தில் அழுத்தங்களைக் கொடுப்பதற்கான முயற்சிகள் தொடர்கின்றன.

பொருளாதாரத்தடை, பொருளாதார வீழ்ச்சி ஆகியன குறித்து அறிவிப்புகள் வெளிவந்தாலும் அவை நடைமுறைக்குவராத வகையில் பார்த்துக்கொள்ளக்கூடிய - செயற்படக்கூடிய ஆற்றல் இலங்கை அரசுக்கு இருக்கின்றது. - என்றார். (த-44)

# ஹெரோய்ன் வழக்கு; ஒருவருக்கு தூக்கு!

கொழும்பு, பெப். 13

382 கிராம் 3 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் வைத்திருந்தமை மற்றும் விற்பனை செய்தமை ஆகிய குற்றங்களுக்காக ஒருவருக்கு காலி மேல் நீதிமன்று நேற்றுத் தூக்குத் தண்டனை விதித்துள்ளது.

அக்மீமன பொலிஸ் பிரிவில் குருந்துவத்தை கோனாமுல்ல பகுதியைச் சேர்ந்த சுதத் நிஷாந்த (வயது - 51) என்பவருக்கே இந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (த-இ)

**மணமகள் தேவை**

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த வயது 37 விசாகம், துலா ராசி தற்பொழுது கொழும்பில் அரச தனியார் நிறுவனத்தில் வேலை செய்கின்ற பட்டதாரி மணமகனுக்கு கல்வி தகைமையுடைய மணமகள் தேவை. (உள்நாடு/வெளிநாடு விரும்பத்தக்கது)

**தொடர்பு: 076 268 5241**

**பணியாளர் தேவை**

- **கணக்கு பதிவாளர் (ஆண்)**
- **விற்பனையாளர் (ஆண்)**

நாளை மறுதினம் (15.02.2021) திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சுயவிபரக்கோவையுடன் நேரில் வரவும்.

**Jaffna Electricals**
**No.94(06) Stanly Road,Jaffna.**
**T.P:021 222 2353 Fax:021222 4302**

NVQ
DMI COMPUTER EDUCATION
TVEC Reg.No.P25/0056
தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத்தில் NVQ தகைமை
ICT - NVQ LEVEL- 5
Diploma in Information Technology (Full Time - 1 Year)
NVQ 5 & 6 குறைந்த கற்கைநெறி கட்டணத்தில் ICT துறையில்
குறுகிய காலத்தில் அரச பல்கலைக்கழகபட்டதாரி ஆகும் சந்தர்ப்பம்.
பதிவுகளை பெப்ரவரி 20ம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளவும்
புதிய பிரிவுகள் ஆரம்பம் 15/2/2021 (Mon) 8.30 am
Call now 0777173517
ICT - NVQ LEVEL - 4 (Full Time - 6 Months)
CAA - NVQ LEVEL - 3 (Full Time - 3 Months, Part Time - 6 Months)
DMI COMPUTER EDUCATION
No113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம் (சயன்ஸ் ஹோல் அருகாமை) 021 222 4403
M.M.V. வீதி, நெல்லியடி 021 226 2470
A9 வீதி, ஆனந்தபுரம், கிளிநொச்சி 021 228 5655
0777240707

Baby Photo
உங்கள் மழலை செல்வங்களின் உயிரோவியமான புகைப்படங்களுக்கு
பேபி போட்டோ
போட்டோ அன் வீடியோ
BABY PHOTO &VIDEO




கலர் பிறிண்டிங்
அல்பம்
கிறிஸ்டல் பிறேம்
லேசர் கட்டிங்
பிளாஸ்ரிக் ஐடி காட்
டி-சேட் பிறிண்டிங்
மக் பிறிண்டிங்
போட்டோ கொப்பி
லெமினேற்றிங்

91.பலாலி வீதி. திருநெல்வேலி 021 222 6912 . 0761419308

## பொது அறிவித்தல்

### திருநெல்வேலி பொதுச்சந்தையில் விவசாய உற்பத்தி பொருட்களிற்கான கழிவு நடைமுறை தொடர்பானது

- விவசாய உற்பத்திப் பொருட்களிற்கு ஏற்கனவே தடைசெய்யப்பட்ட 10% கழிவு முறை முற்றாகத் தடைசெய்வதை உறுதிப்படுத்த இறுக்கமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
- விவசாய உற்பத்திப் பொருட்கள் பொதிகளிலிருந்து அகற்றி தரத்தின் அடிப்படையில் நிறை அளவீடு செய்யப்படும்.
- குத்தகைதாரர் உற்பத்திப் பொருட்களிற்கான சரியான நிறை அள்வீட்டினை பற்றுச்சீட்டில் பதிந்து விவசாயிகள்/ உற்பத்திப் பொருள் கொண்டுவருவோரிடம் வழங்குதல் கட்டாயமானதாகும்.
- உற்பத்திப்பொருட்களிற்கு உரிய நிறை அளவீட்டின்படி பற்றுச்சீட்டு வழங்கப்படாதவிடத்து அதனை கேட்டுப்பெற்றுக்கொள்வது விவசாயிகள் அல்லது உற்பத்திப் பொருட்கள் கொண்டு வருபவர்களது கடமையாகும்.
- குத்தகைதாரரிற்கு உரிய விலையின் 4% வரி விவசாயிகளால்/ உற்பத்திப் பொருட்கள் கொண்டு வருபவர்களால் வழங்கப்பட வேண்டும்.
- சந்தை வியாபாரிகள் பற்றுச்சீட்டில் பதிவு செய்யப்பட்ட நிறைக்கு உரிய விலையை விவசாயிகள் அல்லது உற்பத்திப் பொருட்கள் கொண்டு வருபவர்களிற்கு செலுத்த வேண்டும் என்பதுடன், கழிவு ஏதும் விதிக்கப்படுபவது உறுதி செய்யப்பட்டால் சந்தை இடஒதுக்கீடு/ வியாபார அனுமதி இரத்துச் செய்யப்படும்.
- உற்பத்தியாளர்கள் இந்நடைமுறைக்கு முரணாக குத்தகைதாரர் மற்றும் வியாபாரிகளுடன் எந்தவித புரிந்துணர்வு உடன்பாட்டிற்கும் வருவது தடை செய்யப்படுகின்றது.
- குறித்த விடயம் தொடர்பாக இறுக்கமான கட்டுப்பாடுகள், மேற்பார்வை இடம்பெறும் என்பதால் சகலரது ஒத்துழைப்பும் கோரப்படுகின்றது.
- முறைப்பாடுகளுக்கு 021 222 2700 / 021 314 2842 எனும் தொலைபேசி இலக்கங் களுடன் தொடர்பு கொள்ளவும்.

திரு.ப.மயூரன்
தவிசாளர்
நல்லூர் பிரதேச சபை 13.02.2021

## கொச்சிக்கடை...

பிரிவினர் பல கோணங்களில் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்தக் கடிதம் அண்மையில் கொழும்பு - கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்துக்குக் கிடைத்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது. பாடசாலை, மத வழிபாட்டுத்தலம் ஆகிய பகுதிகளுக்கு தாக்குதல் நடத்தப்படலாம் என்று இந்தக் கடிதத்தில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்தக் கடிதத்தை அடுத்து கடற்கரை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் கொச்சிக்கடை தேவாலயத்தின் பாதுகாப்பும் அதிகரிக்கப்பட்டுள்ளது எனத் தெரியவருகின்றது. (எ-22)

## விவசாயிகள்....

சம்மேளனம் தெரிவித்தது.

வவுனியாவில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டதாவது

விவசாயிகளின் உற்பத்திப் பொருள்களுக்குப் போதுமான, நியாயமான விலை கிடைக்காமையாலும், நுகர்வோருக்கு உரிய விலையில் பொருள்கள் கிடைக்காமையாலும் வவுனியா மாவட்டத்தில் விவசாயிகளுக்கு சேவைவழங்கும் நோக்குடனும் உழவர் சந்தை என்ற அமைப்பை ஏற்படுத்தியிருக்கிறோம். அது வவுனியா பழைய பேருந்து நிலையப் பகுதியில் செயற்படும். இந்த சந்தை விவசாயிகளால் நடத்தப்படும்.

பொருள்களின் நாளாந்த நிர்ணய விலை அங்கு குறிப்பிடப்பட்டிருக்கும். நுகர்வோர் நியாயமான முறையில் அவற்றைக் கொள்வனவு செய்யக்கூடியதாக இருக்கும். அந்த அமைப்பினூடாக விவசாயிகளின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஆலோசனைகளை வழங்குவதற்கும் நாம் ஏற்பாடுகள் செய்துள்ளோம்.

சிறியளவிலேயே முதற்கட்டமாக இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் அதனை விஸ்தரிப்பது தொடர்பாகத் தீர்மானிக்கப்படும்.

வியாபாரம் ஒரு சிலருக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதல்ல. வவுனியாவில் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயக் குடும்பங்கள் உள்ளன. அவர்களின் வாழ்க்கையை 35 பேர் தீர்மானிக்க முடியாது. இந்த விடயத்தில் நாம் கவனமாக இருக்கிறோம். அந்த வகையிலேயே அனைவரையும் திருப்திப்படுத்தும் வகையில் சந்தையை ஏற்படுத்தியுள்ளோம்.

மாவட்டத்தில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் அந்த வாய்ப்பை ஏற்படுத்தும் வகையில் கமநல சேவை நிலையங்கள் ஊடாக விவசாயிகளை இணைத்து அதனை முன்னெடுக்கும் வகையில் உருவாக்கியிருக்கிறோம். என்று தெரிவிக்கப்பட்டது.

வடக்கிலுள்ள சந்தைகளில் சந்தை வியாபாரிகளே அதிகளவு லாபம் ஈட்டிவருகின்றனர் என்றும் விவசாயிகளின் உற்பத்திகளுக்கு உரிய விலை கிடைப்பதில்லை என்றும் விவசாயிகளே கூறிவருகின்றனர். இந்த நிலையில், வவுனியா விவசாயிகள் அதிரடியாக தாமாகவே சந்தையை ஆரம்பித்து தாங்களாகவே சந்தையை நடத்தவும் தொடங்கியுள்ளனர். (கு-110)

## மரண அறிவித்தல்



### அப்பலிங்கம் சந்திரவதனா

பிறப்பு 23.08.1944 இறப்பு 12.02.2021

ஏழாலை மேற்கு ஏழாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அப்பலிங்கம் சந்திரவதனா நேற்று (12.02.2021) வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் அமரர் தம்பு அப்பலிங்கம் (ஓய்வு பெற்ற கணித ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், அப்பலிங்கம் உமாவாகிசர் (பிரதேச செயலகம், உடுவில்), பரமநாதன் நந்தினி (பிரதேச சபை, சுன்னாகம்), கிருஷ்ணகுமார் மைதிலி ஆகியோரின் பாசமிகு தாயாரும், தளையசிங்கம், சத்தியசீலன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சத்தியசீலன்-இன்பநாயகியின் மைத்துனியும், பருக்ஷன், கபிலன், சரண்யா, லிஷானன், லதுராஜ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், பவானி (யா/நடேஸ்வராக் கல்லூரி ஆசிரியை), பரமநாதன் (Super sopes தனியார் நிறுவனம்), கிருஷ்ணகுமார் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், அமரர் சத்தியசீலன் லதர்சனின் பாசமிகு அத்தையும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.02.2021) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கெள்ளவும்.

ஏழாலை மேற்கு,
ஏழாலை.
077 942 2056, 077 116 9769

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### கதிரவேற்பிள்ளை குலேந்திரன் (பவா)

அல்வாய் குமரன் தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் ஆவரங்கால் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேற்பிள்ளை குலேந்திரன் 12.02.2021 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேற்பிள்ளை அருந்தவபூபதி ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வைரவப்பிள்ளை மற்றும் சற்குணம் ஆகியோரின் அன்பு மருமகனும், பத்மாவதியின் அன்புக் கணவரும், தர்மிகாவின் (யாழ் பல்கலைக் கழகம், விஞ்ஞான பீடம்) பாசமிகு தந்தையும், அமரர் கமலேந்திரன் மற்றும் புவனேந்திரன், கமலவதனா, ஜெயந்தி (UK), அமரர் தவேந்திரன் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், பத்மலோஜினி (Germany) சறோஜாதேவி, சுப்பிரமணியம், ரவீந்திரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14.02.2021 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.00 மணி யளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆவரங்கால் கரதடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆவரங்கால் மேற்கு,
ஆவரங்கால்.

தகவல்: குடும்பத்தினர்.
077 8955 980

### சந்தை....

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மருத்து வபீட ஆய்வுகூடத்திலும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ஆய்வுகூடத் திலும் நேற்று 689 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப் பட்டன. அவர்களில் 10 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட் டுள்ளது.

தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களில் 4 பேர் அச்சுவேலி சந்தை வியாபாரிகள் என்று வடக்கு மாகாண சுகாதார சேவை கள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரி வித்தார்.

வடக்கு மாகாணத்தில் சந்தைகளை மீளத் திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட் டுள்ள நிலையில், சந்தை வியாபாரிக ளிடையே எழுமாற்றாக பி.சி.ஆர். பரி சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வரு கின்றன. அச்சுவேலிச் சந்தையிலும் 35 வியாபாரிகளுக்கு பி.சி.ஆர். பரிசோ தனை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதி லேயே தொற்றாளர்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளனர்.

தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களில் இருவர் அச்சுவேலி, பத்தமேனியைச் சேர்ந்தவர்கள். இருவர் அச்சுவேலி தோப் பூரைச் சேர்ந்தவர்கள். அவர்களில் இரு வர் தாயும், மகனும் என்றும், இருவர் கணவன், மனைவி என்றும் தெரிவித்த சுகாதாரப் பிரிவினர் இவர்கள் சந்தை யில் ஒரே வரிசையில் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தனர் என்றும் தெரிவித்தனர்.

மருதனார்மடம் சந்தை கொரோனாக் கொத்தணி கண்டறியப்பட்ட பின்னர், வடக்கு மாகாணத்தில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை சடுதி யாக அதிகரித்தது. வடக்கு மாகாணத்தில் உள்ள சந்தைகள் அனைத்தும் மூடப் பட்டு, கடும் முயற்சியின் பின்னர் கொரோ னாத் தொற்றுக் கட்டுப்படுத்தப்பட்டது.

தற்போது மீளவும் சந்தைகள் திறக்கப் பட்டுள்ள நிலையில், அச்சுவேலிச் சந்தை வியாபாரிகள் இடையே கொரோனாத் தொற்றுக் கண்டறியப்பட்டுள்ளது.

"தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்க ளுடன் நேரடித் தொடர்பில் இருந்தவர் களைக் கண்டறியும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தொற்றாளர் கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் முதற்கட்டமாகத் தனிமைப்படுத்தப்படு வார்கள். தொற்றாளர்கள் சென்ற இடங் கள், அவர்களுடன் தொடர்பில் இருந்த வர்கள், அவர்களுக்குத் தொற்று எவ் வாறு ஏற்பட்டது என்பது தொடர்பில் ஆராயப்படுகின்றது. அவற்றின் அடிப் படையில் மேலதிக நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும்" என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்து வர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (ஏ-26)

### யாழ்....

மருத்துவமனைக்குச் சிகிச்சைக்கு வந்த ஒருவருக்கு நேற்றுமுன்தினம் கொரோ னாத் தொற்று உறுதி செய்யப்பட்டது. அரியாலை முள்ளிப் பகுதியைச் சேர்ந்த, 53 வயதுடைய இவர் யாழ்ப்பாணம் நகர் கொழும்புத்துறை சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் நடத்துநராவார்.

தொற்று உறுதி செய்யப்பட்டவுடன் அவ ரது குடும்பத்தினர் தனிமைப்படுத்தப்பட் டதுடன், அவருடன் நேரடியான தொடர் பில் இருந்தவர்களைத் தனிமைப்படுத் தும் நடவடிக்கைகள் முன்னெடுக் கப்பட் டிருந்தன. அவரது குடும்பத்தினரு க்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோ தனை முடிவுகள் நேற்றிரவு வெளியான நிலையில், மனைவிக்கும், மகனுக்கும் தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட் டுள்ளது. தொற்று உறுதி செய்யப்பட்ட மனைவி வீட்டில் இருப்பவர். மகன் முச்சக்கர வண் டிச் சாரதியாவார். அவருடன் தொடர்பில் இருந்தோரைத் தனிமைப்படுத்தும் நடவ டிக்கைகள் நேற்றுமுன்னெடுக்கப்பட்டன. அரியாலை, முள்ளிப் பகுதி மற்றும் அண்டிய இடங்களில் உள்ள சுமார் 20 குடும்பங்கள் நேற்றிரவு தனிமைப்படுத் தப்பட்டன. மகன் சென்ற இடங்கள் தொடர்பில் ஆராயப்பட்டு வருகின்றது என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித் தனர்.

அதேவேளை, பஸ் நடத்துநரான முதல் தொற்றாளர் யாழ்ப்பாணம் நகரப் பகு தியை விட்டு வெளியிடங்களுக்குச் செல் லவில்லை என்பது ஆரம்ப விசாரணை களில் தெரியவந்துள்ளது. அவருக்குக் கொரோனாத் தொற்று எவ்வாறு ஏற்பட் டது என்பது தெரியவரவில்லை. பஸ் சாரதி தனிமைப்படுத்தப்பட்டுள்ள நிலை யில் அவருக்குப் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு ள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஏ-26)

### 10 பேருக்கு...

மன்னார் மருத்துவமனையில் சேர்க்கப் பட்டிருந்த மூவருக்கு தொற்று உறுதிப் படுத்தப்பட்டுள்ளது. அவர்களில் ஒருவர் முசலி வாடியில் ஏற்கனவே தொற்று உறுதி செய்யப்பட்டவருடன் நேரடித் தொடர்புடையவர் என்று தெரிவிக்கப்பட் டது. ஏனைய இருவரும் கொரோனாத் தொற்று அறிகுறிகளுடன் மருத்துவமனை யில் சேர்க்கப்பட்டிருந்தவர்கள்.

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பில் ஒருவ ருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப் படுத்தப்பட்டுள்ளது. இவர் ஏற்கனவே தொற்று உறுதிப்படுத்தப்பட்டவருடன் நேரடித் தொடர்பைப் பேணியவர். (ஏ-26)

### திறமையான...

யல் தரப்பு வழங்கி வருவதாகத் தெரிவிக் கப்படுகின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தின் வேலணை பிரதேச செயலராகக் கடமையாற்றிய அ.சோதிநாதன் திடீரென இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார். அவரது இடமாற் றத்தின் பின்னணியில் ஆளும் கட்சி யைச் சேர்ந்த அரசியல் தரப்பு தொடர்பு பட்டிருந்ததாகக் கூறப்பட்டிருந்தது. இந்த இடமாற்றத்தை நிறுத்துவதற்கு ஆளும் கட்சியின் மற்றொரு அரசியல் தரப்பு முயற்சிகளை மேற்கொண்டிருந்தபோ தும் அது முழுமையாக வெற்றியளிக்க வில்லை. இருப்பினும் எதிர்காலத்தில் இவ்வாறான இடமாற்றங்கள் அனுமதிக் கப்படாது என்ற உறுதிமொழி சம்பந்தப் பட்ட அமைச்சால் வழங்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில் உயர் அதிகாரிகள் ஊடாக, தமக்கு வேண்டப்படாத ஊழியர் களை அதிகாரிகளை சுயமாக இடமாற் றம் பெற்றுச் செல்ல வைக்கும் நடவ டிக்கை அரசியல் தரப்பால் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. அதற்குரிய அழுத்தங்களை உயர் அதிகாரிகள் அண்மைய நாள்க ளாகப் பிரயோகித்து வருகின்றனர். திற மையான அதிகாரிகள் பலரையும் யாழ்ப் பாண மாவட்டம் இதனால் இழக்கவேண்டி வரும் என்று கூறப்படுகின்றது. (ஒ-இ)

### பம்பைமடு...

வந்து தனிமைப்படுத்தப்பட்டு உள்ளவர் களிலேயே இந்த வகை வைரஸ் தொற் றுக் காணப்படுகின்றது.

இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

பிரிட்டனில் பரவும் கொரோனா வைர ஸின் அதிக பரிமாற்றத்தைக் கொண்ட பி.1.1.7 பரம்பரைக்குச் சொந்தமான புதிய மாறுபாடு கொழும்பு, அவிசாவளை, பிய கம மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங் களைச் சேர்ந்த தொற்றாளர்களிடம் இருந்து பெறப்பட்ட மாதிரிகளில் கண்ட றியப்பட்டுள்ளது என்று மருத்துவர் சந் திமா ஜீவந்திரா தெரிவித்திருந்தார்.

அதுதொடர்பாக விளக்கமளிக்கும்போதே வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மேற்கண்டவாறு தெரிவித் தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

இந்த வகை வைரஸ் ஒரு வாரத்துக்கு முன்பாகக் கண்டறியப்பட்டது. இவர்கள் வவுனியா பம்பைமடு தனிமைப்படுத்தல் மையத்தில் தங்க வைக்கப்பட்டிருந்தார் கள். அதனாலேயே ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக் கழக ஆய்வில் வவுனியாவும் உள்ளடங்குகின்றது.

உள்ளூர் மக்கள் எவருக்கும் இந்தப் புதி யவகை வைரஸ் தொற்று இல்லை என் பதை சுகாதார அமைச்சு உறுதிப்படுத்தி யுள்ளது. அதனால் மக்கள் அச்சமடை யத் தேவையில்லை என்றார். (ஏ)

### கோத்தாவின்...

தமிழ்பேசும் மக்கள் மீதான அரசின் அடக்குமுறைகளைக் கண்டித்தும், சர்வ தேசத்திடம் நீதி கோரியும் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரைக்கும் வடக்கு, கிழக்கு தமிழ்ச் சமூகத்தின் ஏற் பாட்டில் முன்னெடுக்கப்பட்ட பேரணி தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரைக்கும் இடம்பெற்ற பேரணியைப் பல வழிகளில் தடுத்துநிறுத்த அரசு முற் பட்டது. எனினும், வடக்கு, கிழக்கில் பெரும் எண்ணிக்கையில் தமிழ் மக்கள் திரண்டு பேரணியை நடத்தியுள்ளனர். பேரணியில் கலந்துகொண்டவர்கள், அரசுக்கும், இராணுவத்துக்கும் எதிராகவே கோஷங்களை எழுப்பினார்கள். சிங்கள மக்களுக்கு எதிராக அவர்கள் எந்தக் கோஷங்களையும் எழுப்பவில்லை.

நாட்டில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் இராணுவ ஆட்சியே தற் போது நடைபெறுகின்றது. அதனால் சீற்றமடைந்த வடக்கு, கிழக்கு தமிழ் மக் கள் இன்று ஐ.நாவிடம் நீதி வேண்டி ஜன நாயக வழியில் போராட வேண்டிய நிலைக்கு வந்துள்ளனர். கடந்த நல்லாட் சிக் காலத்தில் எமது அரசுக்கு எதிராக தமிழ் மக்கள் இவ்வாறான போராட்டங் களை முன்னெடுக்கவில்லை. ஆனால், இந்த ஆட்சி தமிழ் மக்களை நீதி கேட்டுப் போராடத் தள்ளியுள்ளது.

பொத்துவில் முதல் பொலிகண்டி வரை யான பேரணியில் பங்கேற்றவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்போம் என்று அரச தரப்பினர் வெளியிட்டுள்ள கருத்துக்கு எமது கண்டனங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். தமிழ் மக் களைப் போராடத் தள்ளிய அரச தரப் புக்கு எதிராகவே முதலில் சட்ட நடவ டிக்கை எடுக்க வேண்டும்.

எதிர்வரும் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராகத் தீர்மானங்கள் கொண்டுவரப்பட் டால் அதற்குக் கோத்தாபய அரசே முழுப்பொறுப்பு-என்றார். (ஏ-22)

### மைத்திரி....

க்கூடுமென சந்தேகம் வெளியிடப்பட்டுள் ளது. அறிக்கையின் பரிந்துரைகளுக்கு அமைவாக சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களுக்கு எதிராக குற்றப்பத்தி ரம் தாக்கல் செய்வதற்காகவே சட்டமா அதிபர் இந்தக் கோரிக்கையை விடுத்து ள்ளார் என்று சட்டமா அதிபரின் இணைப் பதிகாரி அரச சட்டத்தரணி நிஷாரா ஜய ரத்ன தெரிவித்தார்.

2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தில் இடம் பெற்ற தாக்குதல் தொடர்பில் விசாரணை களை நடத்துவதற்காக அதே ஆண்டு செப்ரெம்பர் மாதம் 22ஆம் திகதி, முன் னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வால் விசேட ஜனாதிபதி ஆணைக்குழு வொன்று நியமிக்கப்பட்டது. இந்த ஆணைக்குழு, தமது இறுதி அறிக் கையை 2021ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதலாம் திகதி ஜனாதிபதி கோத் தாபய ராஜபக்சவிடம் ஒப்படைத்தது.

அதில், முன்னாள் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன, முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹேமசிறி பெர் னாண்டோ மற்றும் முன்னாள் பொலி ஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர ஆகியோர் மீது குற்றவியல் குற்றச்சாட்டுக்களை சுமத்த வேண்டும் என்று ஜனாதிபதி ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது. எனவே அவர்கள் கைது செய்யப்படக்கூ டும் என ஊகிக்கப்படுகின்றது.

ஆணைக்குழு தமது விசாரணைகளி ன்போது 214 நாள்களில் 457 பேரின் சாட்சிகளைப் பதிவு செய்தது. அவர்களில் அரசியல், பாதுகாப்பு சேவைகளை சேர்ந் தவர்கள், அனர்த்தத்துக்கு முகம்கொ டுத்த மற்றும் அது தொடர்பான செயற்பா டுகளுடன் சம்பந்தப்பட்டவர்களும் அடங் குவர். இந்த அறிக்கை 472 பக்கங்கள், 215 இணைப்புகள் மற்றும் 06 தொகுதி களை கொண்டுள்ளது. (ஏ-22)

### கோத்தா....

சேர்ந்த யோகேஸ்வரி பற்குணராசா நிய மிக்கப்பட்டுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்றன எனக் கூறப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவும், பொறுப்புக்கூறல் விடயங்கள் குறித்தும் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்களின் அறிக்கைகளை மீண்டும் பரிசீலிப்பதற்கான ஆணைக் குழு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் அண்மையில் நியமிக்கப்பட்டிருந்தது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை அமர்வு அடுத்த மாதம் ஆரம்பமாக வுள்ள நிலையில், சர்வதேசத்தை ஏமாற் றவே இந்த ஆணைக்குழுவை நியமித்துள்ளது என்று தமிழ் அரசியல் தலைவர்களும், எதிர்க்கட்சித் தலைவர்க ளும், அரசியல் நோக்கர்களும் விமர்சித் திருந்தனர்.

இந்த ஆணைக்குழுவில் உயர் நீதிமன்ற நீதிபதி ஏ.எச்.எம்.டி.நவாஸ், ஓய்வுபெற்ற பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாந்து, ஓய்வுபெற்ற மாவட்டச் செயலர் நிமல் அபேசிறி ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ள னர். இந்த ஆணைக்குழுவின் ஆணை யாளராக திருமதி யோகேஸ்வரி பற்குண ராசா நியமிக்கப்பட்டுள்ளார். இது தொடர் பான வர்த்தமானி அறிவித்தல் நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

திருமதி யோகேஸ்வரி பற்குணராசாவின் "விவேகம், திறமை மற்றும் பற்றுறுதி" ஆகியவற்றின் மீது நம்பிக்கை கொண்டு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச இந்தப் பதவியில் அவரை நியமித்துள்ளார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசுடன் கூட்டணி அமைத்துள்ள கட்சி ஒன்றைச் சேர்ந்த அரசியல் பிரதிநிதி ஒரு வர் ஆணைக்குழுவின் ஆணையாள ராக நியமிக்கப்பட்டுள்ளது பல்வேறு விமர்சனங்களை எழுப்பியுள்ளது. இதன் மூலம் ஆணைக்குழுவின் நம்பகத் தன்மை மீது கேள்வி எழுந்துள்ளது என்று சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ஏ-இ)

# வடதாரகையை தோற்கடித்தது யுனிபைட் விளையாட்டுக்கழகம்



வவுனியா, பெப். 13

வவுனியா துடுப்பாட்டச் சங்கத்தால் நடத்தப்பட்ட மூன்றாம் பிரிவு அணிகளுக்கு இடையிலான கடினப்பந்து துடுப்பாட்டத் தொடரில் யுனிபைட் அணி கிண்ணம் வென்றது.

யுனிபைட் மற்றும் வடதாரகை அணிகள் இறுதியாட்டத்தில் பலப்பரீட்சை நடத்தின. முதலில் துடுப்பெடுத்தாடிய யுனிபைட் அணி 50 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 230 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ஐ.நிமலேஸ்வரன் 58 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் வடதாரகை விளையாட்டுக் கழகம் சார்பாக ச.ஜிதர்சன் 3 இலக்குகளை வீழ்த்தினார்.

231 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குக் களமிறங்கிய வடதாரகை அணி 42.4 பந்துப்பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 198 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் வடதாரகை அணி சார்பாக ச.ஜிதர்சன் அதிகபட்சமாக 45 ஓட்டங்களையும் பந்துவீச்சில் யுனிபைட் சார்பாக மு.உதயகுமார் இரண்டு இலக்குகளையும் வீழ்த்தினர்.

ஆட்டநாயகனாக யுனிபைட் அணியின் செ.ருசாந்தனும், தொடர் நாயகனாக வடதாரகை அணியின் சத்தியமூர்த்தியும் தெரிவாகினர். (ம-110)

ENGLISH ஆங்கிலம்
பிரத்தியேக வகுப்புகள்
உங்கள் வீட்டிற்கு வந்து
கற்பிக்கப்படும்
T.P: 0776589443 யாழ்ப்பாணம்

கடை வாடகைக்கு தேவை
திருநெல்வேலி சந்தைப்
பகுதியில் கடை ஒன்று
வாடகைக்கு தேவை
தொடர்பு: 077 725 7515

# வைக்கின்ஸை வென்றது அரியாலை கில்லாடிகள்!

யாழ்ப்பாணம், பெப். 13

ஞானம்ஸ் பெயின்ட் சம்பியன்ஸ் லீக் கிண்ணத்துக்கான துடுப்பாட்டத் தொடரில் அண்மையில் நடைபெற்ற ஆட்டமொன்றில் சுழிபுரம் வைக்கின்ஸ் அணியை வீழ்த்தியது அரியாலை கில்லாடிகள்.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற சுழிபுரம் வைக்கின்ஸ் அணியினர் துடுப்பாட்டத்தைத் தீர்மானித்தனர். அந்த அணியினர் நிர்ணயிக்கப்பட்ட 19 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 121 ஓட்டங்களைப் பெற்றனர். அதிகபட்சமாக மதுசன் 55 ஓட்டங்களையும் நிரோசன் 37 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் அரியாலை கில்லாடிகள் அணிசார்பாக மதுசன் 3 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 18 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 2 இலக்குகளையும் மற்றும் சுயாந்தன் 4 பந்துபரிமாற்றங்கள் பந்துவீசி 19 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.




பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அரியாலை கில்லாடிகள் அணியினர் 16.5 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்குகளை மாத்திரமே இழந்து வெற்றி பெற்றனர். அதிகபட்சமாக ஆகிசன் 69 ஓட்டங்களையும், வியாஸ்காந் 22 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் வைக்கின்ஸ் சார்பாக அலன்ராஜ், தினோஜன் இருவரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக அரியாலை கில்லாடிகள் அணியின் ஆகிசன் தெரிவானார்.

(ம-320)

## வேலைவாய்ப்பு

**புலமைச்சுடர்** கல்விச் சஞ்சிகை வெளியீட்டு நிறுவனத்திற்கு கீழ்வரும் வெற்றிடங்களுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

- **கிராப்பிக் டிசைனர்** (Graphic Designer)
- **மெசின் மைன்டர்** (Machine Minder)


மேற்படி வெற்றிடங்களுக்கு தகுதியானவர்கள் இன்று (13.02. 2021) சனிக்கிழமை காலை 09.00- 12.00 மணிவரை நடைபெறும் நேர்முகத் தேர்விற்கு சமுகம் தரவும்.

முன் அனுபவம் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.

உதயன் இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## 31ம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 27 . 09 . 1949



இறப்பு 15 . 01 . 2021

### அமரர் கந்தசாமி சந்திரபாலன் (சின்னகிளி)

*எங்கள் குடும்பத்தின் வழிகாட்டியாயிருந்து*
*ஆதரித்த அன்புத் தெய்வமே!*
*எங்கள் உள்ளங்களில் நீங்கள் நினைவாய்*
*நின்று வழிகாட்டுவீரே!*

கடந்த (15.01.2021) அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் சகல உதவிகளையும் முன் வந்து உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் எமது இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

21.02.2021 ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதிய போசன நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

டச் வீதி, உடுவில்,
சுன்னாகம்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

பிறப்பு 13 . 05 . 1941



இறப்பு 09 . 02 . 2021

### திருமதி செல்வராணி ஞானபண்டிதர்

யாழ். மானிப்பாய் கட்டுடையைப் பிறப்பிடமாகவும், லண்டனை வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்வராணி ஞானபண்டிதர் அவர்கள் 09.02.2021 செவ்வாய்க்கிழமை அன்று லண்டனில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான கனகரட்ணம் செல்லக்கண்டு தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான விநாசித்தம்பி, யோகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற ஞானபண்டிதர் (ஓய்வுபெற்ற இராணுவ மேஜர்) அவர்களின் அன்பு மனைவியும், செல்வஜீவன் (லண்டன்), ஞானறதி (சுவிஸ்), விஜிதா (லண்டன்), வைதேகி, பிரதீபன் (சுவிஸ்-ஜெனிவா) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான கனகராஜா, திரவியராஜா, விமலராஜா மற்றும் ஜெயராஜா (யாழ்ப்பாணம்), விவேகானந்தராஜா (யாழ்ப்பாணம்), மனோறஞ்சிதராணி (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுவர்ணா, இரட்ணசிங்கம், தர்மிகா ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான ஞானேஸ்வரி, கனகநாயகம், மங்கையற்கரசி மற்றும் ராசலட்சுமி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும், சங்கவி, பகலவன், சஞ்ஜீவன், கிருத்திகா, சருன், ரொஷிகா ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**செல்வஜீவன்** - **மகன்** • Mobile : +447939464100
**ஞானறதி** - **மகள்** • Mobile : +41791748806
**விஜிதா** - **மகள்** • Mobile : +447534101687
**பிரதீபன்** - **மகன்** • Mobile : +41799430235
**மனோறஞ்சிதராணி** - **சகோதரி** • Phone : +94764627232
• Mobile : +94212227611

**தகவல்:**
**குடும்பத்தினர்.**



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.02.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.